Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (26-7-66) இதழ் 166

பராபவ ஆடி 10 ரபி: ஆகி 7 செவ்வாய்க்கிழமை

## மாஸேதுங்கின் 65 நிமிட நீச்சல்:

### 5000 மக்கள் நேரில் பார்த்தனர்

பீகிங், ஜூலை 25

எழுபத்திரண்டு வயதுள்ள சீனத்தலைவர் மா-ஸே-துங் இன்று யாங்ஸே நதியில் சுமார் 65 நிமிட நேரம் வரை நீந்தினார்.

இதனை சுமார் ஐயாயிரம் மக்கள் கண்டு களித்தனர்,

சீனத்தலைவர் உடல் நிலை குன்றியிருப்பதாக வெளியான செய்திகளை மறுக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

விவசாயிகளுக்கு

## கூடுதலான விதைநெல்

கொழும்பு, திங்கள்

விவசாய அமைச்சின்புதிய திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அதிகஅளவில் விதை நெல் கிடைக்கவிருக்கிறது

அடுத்த இரண்டுவருடங்களில் நான்கு லட்சத்து எழுபதினாயிரம் தொன் விதை நெல் விவசாயிகளுக்கு விநியோகிக்கப் படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி அமைச்சுக்கு 15 லட்சம் ரூபா செலவு ஏற்படும்.

# சதி வழக்கு எதிரிகள் தாக்கப்பட்டனராம்

## அடிதாங்காமல் வாக்குமூலம் அளித்ததாகப் புகார்

### 2ம் எதிரி இன்னும் வெளிவரவில்லை

கொழும்பு, திங்கள்

இவ்வருடம் பெப்ரவரிமாதம் 17ந் திகதிக்கும் 22ந் திகதிக்குமிடையில் தேசீய அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாகவும் அரசங்க அமைச்சர்கள் சிலரையும் இடதுசாரித் தலைவர்கள் சிலரையும் பலாத்காரச்செயல்கள்மூலம் கொலை செய்யத் திட்டமிட்டதாகவும் ஒரு பௌத்த பிக்கு உட்பட இருபத்தெட்டுப் பேர்மீது குற்றம் சாட்டப்பட்ட சதிவழக்கு இன்று காலை கொழும்பு கோட்டை பிளாக்ஸ்டார்ப்வீதியிலுள்ள கடற்படைத்தலைமைக்காரியாலயத்திலுள்ள நீதிமன்றக் கட்டடத்தில் கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு.பி.ஜி.எஸ்.டேவிட் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது, எதிரிகள் எண்மர் பொலிஸாராலும், கடற்படையினராலும் தாக்கப்பட்டதாக அவர்களின் வழக்கறிஞர் புகார் செய்தார்.

லாரன்ஸ் கோப்ரல் அமரதுங்கா, சார்ஜண்ட் ஹொந்தமுனி, சார்ஜண்ட் பண்டாரா, லான்ஸ்கோப்ரல் டொன் மேயதுன்ன, சார்ஜண்ட் கே. டி. சிறிசேன, சார்ஜண்ட் என். கொரலகே, எல். பி பியசேன, கே. ஏ. ஞானபால ஆகியோரே தாம் தாக்கப்பட்டதாகப் புகார்செய்திருந்த எதிரிகள்.

முதலாவது எதிரி வண. ஞானசீக தேரோவின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் தமது கட்சிக்காரர் குறிப்பிட்ட சில வாக்குமூலங்கள் அளித்துள்ளதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதைத் தாம் உரிய கட்டத்தில் எதிர்க்கப்போவதாகத் தெரிவித்தார்.

திலகரத்ன, தொடம்பே முதலாளி ஆகியோர் மத்திய காரியாலயத்திலுள்ள துப்பறியும் பகுதிக் கட்டடத்திலிருந்து உயிர் தப்புவதற்காகப் பாயும்சமயத்தில் தாக்கப்பட்டதைத் தமது கட்சிக்காரர் நேரில் கண்டதாக எதிரிகள் சார்பில் ஆஜரான சில வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள் இதுபோன்று தமது கட்சிக்காரர்களும் தாக்கப்பட்டதாகவும் அவர்கள் எடுத்துக்கூறினார்கள்.

ஒப்புதல் வாக்குமூலங்கள் பின்னர் ஆட்சேபிக்கப்படலாமென மாஜிஸ்டிரேட் தெரிவித்தார்.

சதிவழக்கு விசாரணை நடைபெறும் நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சதிவழக்குக் குற்றம்சாட்டப்பட்டுள்ள எதிரிகள் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்துக்குக் கொண்டு வரப்பட்டனர்.

முதலாவது எதிரி வண ஞானசீக தேரோவைத் தொடர்ந்து எதிரிகள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக எதிரிகளின் கூண்டில் ஏற்றப்பட்டனர். இரண்டாவது எதிரியான சுனில் ஹேவகேயைத்தவிர எதிரிகள் அனைவரும் நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தனர். தலைமறைவாகி

(8-ம் பக்கம் பார்க்க)

## ஜ. தொ. கா. வேலைநிறுத்தம் ஒத்திவைக்க முடிவு

### ஆனால் ஊவாபகுதியில் தொடர்ந்து நடக்கும்

கொழும்பு, திங்கள்

பஞ்சப்படி 17-50 கோரி ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் நடத்திவரும் வேலைநிறுத்தத்தை ஒத்திவைப்பதற்குமுடிவுசெய்துள்ளது.

இன்று இரவு வெகுநேரம் வரை ஆலோசனை நடத்திய ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்சபை பதுளை, ஹப்புத்தளைப் பகுதியைத்தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வேலைநிறுத்தத்தை ஒத்திப்போடுவதென்று முடிவுசெய்தது.

சிலதோட்டங்களில் தொழிலாளர்கள் தாமாகவே வேலைக்குத் திரும்பிவிட்டதாக காங்கிரஸ் மாவட்டப் பிரதிநிதிகள் அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது. சுமார் 35ல் இருந்து 40 ஆயிரம் தொழிலாளர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக காங்கிரஸ் வட்டாரங்கள் கூறின. கடந்த இரண்டு வாரங்களில் சுமார் 30 அல்லது 40லட்சம்ருபாய்நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக முதலாளிமார் சம்மேளன வட்டாரங்கள் தெரிவித்தன.

## யு. என். பி. மாநாட்டில் தமிழரசு, காங்கிரஸ் தலைவர்கள்

கொழும்பு, திங்கள்,

செப்டம்பர் மாதம் 21-ம் 22-ம் திகதிகளில் மகியங்கனையில் நடைபெறவிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தமிழரசுக் கட்சி, தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய தமிழ் பேசும் மக்களின் அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்வார்களெனத் தெரியவருகிறது.

சரித்திரப் பிரசித்திபெற்ற மகியங்கனையில் கட்சியின் மகாநாட்டை நடத்துவதென்று ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக சபை இன்று தீர்மானித்தது. பிரதமர் திரு. டட்லி சேனநாயகா தலைமையில் நடைபெறவிருக்கும் இம் மகாநாட்டில் தேசிய அரசாங்கத்தின் மந்திரிகள் அனைவரும் கலந்து கொள்வார்களென்றும், மகியங்கனை பௌத்த ஆலயத்தில் அவர்கள் மலர் வைத்து அஞ்சலி செய்வார்களென்றும் அறியப்படுகிறது,

உயர்கல்வி மசோதா

## மக்கள் தேவையை பூர்த்தி செய்ய தவறிவிட்டது

### பல்கலைக் கழகத்தின் நிலைமை குறித்து கல்விமந்திரி விளக்கம்

கொழும்பு, திங்கள்

''பல்கலைக்கழகங்கள் நாட்டின் கல்வித்தேவைகளைப் பூர்த்திசெய்யத் தவறிவிட்டன. நாட்டு மக்களின் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யவும் அவைகளால் முடியாமற் போய்விட்டது.'' என்று கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இன்று ஜனப் பிரதிநிதிகள் சபையில் கூறினார்.

உயர் கல்விமசோதாவின் இரண்டாவது வாசிப்பின் மீது அவர் பேசினார். மசோதாமீது பல அங்கத்தவர்கள் கடும் ஆட்சேபனைகளைத் தெரிவித்தனர். ஒரு கட்டத்தில் மந்திரி வெளிநடக்கப்போவதாவும் பயமுறுத்தினார்.

திரு. இரியகொல்லை மேலும் கூறியதாவது:

பல்கலைக் கழகத்திலிருந்து ஒரு தலைவராவது உருவாகவில்லை. பல்கலைக்கழகத்துக்கென ஏராளமான பணம் செலவிடப்படுகின்றது. ஆனால் அப்பணத்துக்கான பிரதிபலன் கிடைக்கவில்லை. பல்கலைக்கழகத்தின் நிர்வாகிகள் மக்களுக்குப் பதில் சொல்லக்கூடிய நிலையிலில்லை. செலவழிக்கப்படும் பணத்தின் மீதும் மக்களின் கட்டுப்பாடு இல்லை. பொதுக் கணக்குக் கமிட்டியினால்கூடச் செலவுகளைக் கட்டுப்படுத்தக் கூடியதாக

(8-ம் பக்கம் பார்க்க)

## 5 பேர்கொண்ட உபகமிட்டி நியமனம்

### விவாதங்களைக் கேட்டு திருத்தங்கள் செய்ய ஏற்பாடு

கொழும்பு, திங்கள்

உயர் கல்வி மசோதா மீதான விவாதம் பிரதிநிதிகள்சபையில் நடைபெறும்போது தெரிவிக்கப்படும் கருத்துக்களை ஆராய்ந்து உடனுக்குடன் சபையிலேயே மசோதாவில் திருத்தங்கள் செய்வதற்கான 5 பேர் கொண்ட உபகமிட்டியொன்றை நியமிக்க அரசாங்கக்கட்சியின் பாராளுமன்றக் குழு முடிவுசெய்துள்ளது.

இந்த உபகமிட்டியில் அரசாங்கக் கட்சியிலுள்ள எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடம்கொடுக்கப்படுமென்று தெரிகின்றது.

(8-ம் பக்கம் பார்க்க)

## பீலிக்ஸ் கிளப்பிய இரண்டு ஒழுங்கு பிரச்னைகள்

### பிரதமர் விளக்கத்தை ஏற்று சபாநாயகர் நிராகரித்தார்

கொழும்பு, திங்கள்

கல்வி மந்திரியின் உயர் கல்வி மசோதாவின் இரண்டாவது வாசிப்புமீதான விவாதம் இன்று பிரதிநிதிகள் சபையில் ஆரம்பமானபோது தொம்பே பிரதிநிதி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இரண்டு ஒழுங்குபிரச்னைகளைக் கிளப்பினார்.

மசோதாமுதல்முறையாக சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது அதன்தலைப்பை வாசிப்பதற்கு சபை குமாஸ்தா தவறிவிட்டார் என்பதுதான் திரு. பண்டாரநாயக்காவின் முதல் ஒழுங்குப் பிரச்னை. மசோதாவின்தலைப்பு வாசிக்கப்படவேண்டியது சபைநிரந்தரவிதிகளில் ஒன்றாகுமென்று அவர் சுட்டிக்காட்டினார்.

உத்தியோகமொழியில்

திரு. பீலிக்ஸ் தமது இரண்டாவது ஒழுங்குப் பிரச்னையில். மசோதா உத்தியோக மொழியில் சமர்ப்பிக்கப்படவில்லையென்றும்சபையின் நிரந்தர விதிகளின்படி எந்த மசோதாவும் உத்தியோக மொழியில் இருக்க வேண்டுமென்றும் சுட்டிக்காட்டினார். இந்த நிலைமையில் இரண்டாவது வாசிப்புக்குஇடமில்லையென்று அவர் குறிப்பிட்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

**காணி**

10 பரப்பு கட்டடம் கட்டக்கூடிய நல்ல காணி 'மாதர் ஒழுங்கை' மானிப்பாயில் உண்டு. விபரங்கட்கு - மாதர் 110 மெயின் வீதி, யாழ்ப்பாணம். 751

### வாடகைக்கு

**வீடு**

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரிக்கருகில் சகல வசதிகளுமுடைய 124-ம் நம்பர் வீடு வாடகைக்கு உண்டு. விபரங்களுக்கு, 38, கல்லூரி வீதி, நீராவியடியில் விசாரிக்கவும். 788

### வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### கல்வி

**வகுப்புகள்**

சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், பொருளியல், வர்த்தக எண் கணிதம் (தமிழ்/ஆங்கிலம்) க. பொ. த. ப. (சாதாரணம்) மார்கழி பரீட்சைக்கான 6 மாத விசேட வகுப்பு தொடங்கியிருக்கிறது. 31-7-66க்குள் சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924( பருத்தித்துறை; வர்த்தகக் கல்லூரி, வதிரி கரவெட்டி. 783

இன்று குதூகல ஆரம்பம்

இராஜநாயகி தியேட்டர்

காங்கேசன்துறை

26-7-66 முதல்

"The Secret Seven"

என்ற (Cinemas scope) சினிமாஸ்கோப் படத்துடன் ஆரம்பிக்கப்படும். தினசரி 5-30, 9-30 காட்சிகள். 631

REGAL—JAFFNA
NOW SHOWING
Kerwin Mathews
in
Panic In Bangkog
(Cinemascope - Color)

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
முத்துராமன் - ராஜஸ்ரீ
நடித்த
அம்மா எங்கே?

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ஜெமினி—சரோஜாதேவி
நடித்த
கைராசி

4-வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கும்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) விஜிதா (ஹட்டன்)
பி. ப. 2, 6, 9-30 மணி

ஒரு பெண் பைத்தியமாக இருந்தபோது எதற்கோ சிரித்தாள்......எதற்கோ அழுதாள். ஆனால் மனநிலை தெளிந்த பிறகோ எதற்கோ துடித்தாள்.

மனநிலை தெளிந்த ஒரு பெண்ணின் சிறு கதைதான்



ஜெயலலிதா - ஸ்ரீகாந்த்
மற்றும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
"வெண்ணிற ஆடை"
(ஈஸ்ட்மன் கலர்)
இசை:—விஸ்வநாதன், ராமமூர்த்தி
கதை, வசனம், டைரக்ஷன்
ஸ்ரீதர்


# கள்ள நாணயம் தயாரித்தாராம்

மாவிட்டபுரம், திங்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த என். குணரத்தினம் என்பவர் சென்ற வருடம் ஏப்ரல் மாதம் 23ந் தேதி சட்டவிரோதமாகக் கள்ள நாணயம் தயாரித்ததாகவும், கள்ள நாணயம் தயாரிக்கும் உபகரணங்களை வைத்திருந்ததாகவும், சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட நாணயம் என்று தெரிந்தும் அவற்றை வைத்திருந்ததாகவும் குற்றஞ்சாட்டிக் காங்கேசன்துறைப் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நிற்சிங்கா முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சுன்னாகம் பொலிஸ்கான்ஸ்டபிள் திரு. கருணரட்ண சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''சம்பவ சமயம் நான் காங்கேசன்துறைப் பொலிஸில் கடமையாற்றினேன். சென்ற வருடம் ஏப்ரல் மாதம் 23ந் தேதி நண்பகல் 1-30 மணியளவில் காங்கேசன்துறை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு போலியும், அச்சுவேலி கிராமசேவகரும், நானும், மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களும் அச்சுவேலியில் வசிக்கும் வல்லிபுரம் செல்வராரா என்பவரின் வீட்டுக்குச் சென்றோம். வீட்டு விறாந்தையில் ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் தங்க வளையலுக்குச் சித்திர வேலைப்பாடு செய்துகொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் அவரை நோக்கிச சத்தம் போடவேண்டாம் என்றும், அவ்விடத்தைவிட்டு நகர வேண்டாமென்றும் சைகையால் கூறினார். பின்னர் இன்ஸ்பெக்டரும் நானும் விறாந்தையின் ஒரு மூலையில் இருந்த அறையை நோக்கிச் சென்றோம். அந்த அறைக்குள் எதிரி ஒரு பட்டறைக்கு முன்னால் இருந்துகொண்டு ஓர் அச்சுக்குள் இரும்புக்கம்பியால் துழாவிக்கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் அவர் இருந்த பாய்க்குள் எதையோ சொருகினார். பாயைச் சோதித்துப் பார்த்தபோது பாய்க்குக் கீழ் 1963ம் ஆண்டு அடிக்கப்பட்ட ஐம்பது சத வெள்ளி நாணயமும், அதேபோன்ற போலி ஐம்பது சதத்தின் ஒரு பாதியையும் இன்ஸ்பெக்டர் கண்டெடுத்தார்.''

சாட்சியை எதிரிதரப்பு வழக்கறிஞர் குறுக்குவிசாரணை செய்தபின் நீதிபதி மேல்விசாரணையை அடுத்த மாதம் 21ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

எதிரிதரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே செல்வரத்தினம் ஆஜரானார். பொலிஸ்தரப்பில் சப்-இன்ஸ்பெக்டர் திரு கே. செல்லையா ஆஜரானார்.

---

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அதிபராகக்கடமையாற்றிய திருமதி காயத்திரி கணேசன் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## ஸ்ரீ குகானந்தவாரியார்

உடுவில், திங்கள்

உடுவில்வெட்டுக்கட்டைப் பிள்ளையார் கோவிலில் கடந்த வெள்ளிக்கிழமைவிசேட பூசை, ஆராதனைகள் நடைபெற்றன. அன்றுமாலை 7 மணியளவில் தென்னிந்திய சமயத்தொண்டர் குக ஸ்ரீகுகானந்த வாரியாரின் ''மாங்கனிபெற்ற மங்கை'' என்னும் கதாப்பிரசங்க நிகழ்ச்சி இடம்பெற்றது.

தென் இந்தியாவில் இருந்து சமயப் பிரசங்கங்கள் செய்வதற்காக இம்மாதம் 12-ம் திகதி இலங்கை வந்துள்ள குகஸ்ரீகுகானந்தவாரியார் இலங்கையின் பல பாகங்களிலும் சமயச்சொற்பொழிவுகளை நிகழ்த்திவருகிறார். சுமார் மூன்றுமாத காலம்வரை இவர் இலங்கையின் பல பாகங்களுக்கும் சென்று சமயச்சொற்பொழிவுகளை நடத்தவிருக்கின்றார்.

## எழுத்தாளர் சங்கம் அனுதாபம்

உடுப்பிட்டி, ஞாயிறு

''பாரதத்திலே கவிஞர் பாரதி, பாரதிதாசன் போன்றோரின் கவிதைகளைப்போல இலங்கையிலே கவிதைகள் இயற்றக்கூடிய ஒருவர் இருந்தாரெனில் மலையகத்துக்கவிஞர் திரு. பெரிய சாமியையே சாரும்'' என்று வடமராட்சி இளம் எழுத்தாளர் சங்கம் நடாத்திய காலஞ்சென்ற மலையகக் கவிஞர் திரு. பெரி. பெரியசாமியின் அனுதாபக்கூட்டத்தில் பேசுகையில் பண்டிதர் க. வீரகத்தி கூறினார். நெல்லியடி மத்திய மகாவித்தியாலய சரித்திர ஆசிரியர் திரு. வீ. கே. நடராசா தலைமை வகித்தார்.

புலவர் சு. கணபதிப்பிள்ளை, புலவர் திருமதி புவனேஸ்வரி கார்த்திகேசு பொன். கணேசன், ஆகியோரும் பேசினர்.

---

## கம்பளித்துணிகளுக்கு கட்டுப்பாடு

நுவரேலியா, திங்கள்

நுவரேலியா மாவட்டத்தில் உபயோகிக்கப்பட்ட கம்பளித் துணி வகைகள் கட்டுப்பாட்டு விலையின் கீழ் கொண்டுவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் மாத முடிவிற்குள் விற்பனைக்குள்ள உபயோகிக்கப்பட்ட கம்பளித் துணிவகைகளின் இருப்புப் பற்றியும் எங்கே விற்பனைக்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் கட்டுப்பாட்டு விலைப் பகுதிக்கு அறிவிக்கவேண்டும்.

---

புதிய தலைவர்

## பல விஷயங்களையும் ஆராய்வார்!

ஊர்காவற்றுறை, திங்கள்

ஊர்காவற்றுறை பட்டின சபையின் புதிய தலைவர் திரு. அல்பிரட் சேரி ஒழிப்பு குடிநீர் விநியோகம், சபைக்கென நிரந்தரக்கட்டடம் அமைத்தல், மின்சாரம் பெறுதல், பொதுவிளையாட்டு மைதானம் அமைத்தல் முதலிய விஷயங்களில் முன்னைய தலைவரது திட்டங்களை அமுல் நடத்துவது சம்பந்தமாக ஆராய்வார்.

## விளையாட்டுக்கழக புதிய நிர்வாகிகள்

குரும்பசிட்டி, திங்கள்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற யாழ். அமெச்சூர் உடற்பயிற்சிக் கழகங்களின் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் 1966-1967ம் ஆண்டிற்குரிய புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் கே. இராசையர், காரியதரிசி வி. மி. கணேசலிங்கம், உப காரியதரிசி எஸ். ஜி. தேவா, தனாதிகாரி பி. மகேந்திரன், கணக்குப் பரிசோதகர் திரு. வி. சோமஸ்கந்தன்.


## விளம்பரம்

### யாழ்ப்பாணக் கல்லூரி

**பட்டதாரி மாணவர் பகுதி**

பொ. க. த. (G. A. Q.), பொ. அ. த. (G. S. Q.) வகுப்புகளுக்குச் சேர்.

செப்டம்பர் — ஒக்டோபர் மாதங்களில் ஆரம்பிக்கவிருக்கும் மேற்படி வகுப்புகளுக்குச் சேரவிரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் அழைக்கப்படுகின்றன. தேவைப்பட்ட துறைக்கேற்ப க. பொ. த. (சா. த.) பரீட்சையில் (G, C. E. (O. L.) சித்திகளுடன், உயர் தராதரப் பரீட்சை அல்லது க. பொ. த. (உ. த') பத்திரப் பரீட்சையில் G. C. E. (Ad. L.) ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தியெய்தியவர்கள்எல்லோரும் விண்ணப்பிக்கலாம்.

முத்திரை ஒட்டப்பட்ட தம் விலாசமெழுதிய நீண்ட தபாலுறை அனுப்புபவர்களுக்கு விண்ணப்பப் பத்திரமும் இதர தகவல்களும் அனுப்பி வைக்கப்படும்.

பதிவாளர்
வட்டுக்கோட்டை. 686


## அருட்கலாலய விகாரை அமைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

சிறீலங்கா அருட்கலாலய சங்க ஆண்டுப்பொதுக் கூட்டம் 30-ந் திகதி சுன்னாகத்தில் அருட்கலாலயமகாவிகாரையில் நடைபெறுமென்றும் இக்கூட்டத்தில் சிறீலங்கா அருட்கலா மகாவிகாரை அமைப்பு, அனுராதபுரம் சிறீ மகாபோதியின் வடக்குக்கிளை நாட்டல், சிறீலங்கா அருட்கலாலயம், சுன்னாகம் மகாவித்தியாலயம் ஆரம்பம், அருட்கலாலய வடமாகாணக்கிளை அமைப்பு ஆகிய விஷயங்கள் பற்றி ஆலோசிக்கப்படுமென்றும் துண்டுப்பிரசுரமொன்று கூறுகிறது.

இத்துண்டுப் பிரசுரத்தில் கூட்டத்துக்குச் சமூகந் தந்தோர் அனைவரும் சிறீ இலங்கா அருட்கலாலய சங்க அங்கத்தினர்களாகக்கருதப் படுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## 2558 பேருக்கு வேலை கிடைத்தது

கொழும்பு, திங்கள்

கொழும்பு மத்திய தொழில் பதிவு நிலையத்தின் மூலம் 2558 பேர்களுக்கு தனியார் துறையிலும் பொதுச்சேவைப் பகுதியிலும் வேலைவாய்ப்புக்கள் கிடைத்ததாக தெரியவருகிறது.

கடந்த 12 மாதங்களுக்குள்ளும் 10,000 பேர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கொடுக்கப்பட்டதாகவும் கடந்த மாதத்தில் தான் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் கிடைத்ததாகவும் தொழில் இலாகா அறிவித்துள்ளது.

---

## தலைமை ஆசிரியர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், செவ்.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்ப பாடசாலைத் தலைமையாசிரியர் 'ஆசிரியமணி' திரு க. ஆறுமுகம் கந்தரோடை கந்தைய வித்தியாசாலை தலைமையாசிரியராக இம்மாதம் 15-ந் திகதியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பு விவேகானந்தா வித்தியாசாலையில் பதின்மூன்று வருடகாலம் தலைமைஆசிரியராகவும், பின்னர் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆரம்ப பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கர ரயில் விபத்து; 28 பெட்டிகள் தீப்பற்றி எரிந்தன

புதுடில்லி, ஜூலை 25

பீகாருக்கருகே மதப்பூர் என்னுமிடத்தில் நேற்று ஏற்பட்ட சரக்கு ரயில் விபத்து ஒன்றில் 28 ரயில் பெட்டிகள் தீப்பற்றி எரிந்தன! பல பெட்டிகள் வெடித்துச் சிதறுண்டன.

சரக்கு ரயில் ஒன்று மதபூர் ரயில் நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது என்ஜினுக்கு அடுத்த ரயில்பெட்டியொன்று தடம்புரண்டதனால் இவ்விபத்து நிகழ்ந்ததாகச் சொல்லப்படுகிறது. தீப்பற்றி எரிந்தவையாவும் பெட்ரோல் வாகன்களாகும். இந்த ரயில் விபத்தினால் 28 பெட்டிகள் நாசமடைந்தன. சித்தரஞ்சனிலிருந்து தீயணைக்கும் படையினர் உடனடியாக வந்து தீயை அணைத்துவிட்டனர் என்றும் இவ்விபத்தினால் உயிர்ச்சேதமெதுவுமில்லை என்றும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தோனேஷிய புதிய மந்திரிசபை

## ஏகாதிபத்திய, கம்யூனிஸ எதிர்ப்புள்ளதாகவிருக்கும்

ஜாகர்த்தா, ஜூலை. 25

இந்தோனேஷியாவின் புதிய மந்திரிசபை ஏகாதிபத்திய எதிர்ப்புள்ளதாகவும் கம்யூனிஸ எதிர்ப்புள்ளதாகவுமிருக்குமென்று அதிபர் டாக்டர் சுகர்ணோ தெரிவித்துள்ளார்.

புதிய மந்திரிசபை இன்று அறிவிக்கப்படும்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

போகூர் அரண்மனையில் நேற்று அதிபர் சுகர்ணோ தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் புதிய மந்திரிசபை அமைப்புப்பற்றி முடிவு செய்யப்பட்டது. புதிய மந்திரிசபையில் 4 முதன்மந்திரிகளும் 20 மந்திரிகளும் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இராணுவத் தலைவர் முதன்மந்திரியாகவிருப்பார் என்று கூறப்படுகிறது. இதே பதவி வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்குக்கும் வழங்கப்படலாமென்று தெரியவருகிறது.

## "விமானிகள்மீது விசாரணை இல்லை"

ஹானோய், ஜூலை 25

கைது செய்யப்பட்ட அமெரிக்கவிமானிகளுக்கு எதிராக உடனடியான விசாரணைகள் எதுவும் இப்போதைக்கு இல்லை என்று வடக்கு வியட்னாம் ஹோ-சி-மின் அறிவித்துள்ளார்.

## ஷா பற்றிய கருத்தரங்கு

கொழும்பு, திங்கள்

பிரபல ஆங்கில நாடகாசிரியரான பெர்னாட்ஷாவின் 110 வது வருடாந்த ஜனன தினவிழாவைக் கொண்டாடுமுகமாக இலங்கையில், குறிப்பாகக் கொழும்பில் இவ்வாரம் கருத்தரங்குகள் நாடகங்கள், காட்சிகள் நடைபெறுகின்றன.

இன்றுமாலை கொழும்பிலுள்ள விஞ்ஞான, தொழில் நுட்ப ஸ்தாபன மண்டபத்தில் 'ஷா ஒரு நாடகாசிரியர்' என்னும் பொருள்பற்றி பிரிட்டிஷ் கவுன்ஸிலைச் சேர்ந்த திரு. எஸ். ஆர். சிமித் சொற்பொழிவு ஒன்றை நிகழ்த்தினார். கருத்தரங்கு நாளை 26-ந் திகதியும் 27-ந் திகதியும் தொடர்ந்துநடைபெறும். 26-ந் திகதி இலங்கை சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் ஆஸ்லி, "ஷா ஒரு நாடகவிமர்சகர்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார்.

ஜூலை 27-ந் திகதி "ஷாவும் ஆங்கில மொழியும்" என்ற பொருள்பற்றி நடைபெறும் கருத்தரங்கில் செனட்டர் ரொறிக் டீ சூஸா, கல்வி இலாகாவைச் சேர்ந்த திரு. ஈ. எல். திவிததஸ், அமெரிக்க தூதரகத்தை சேர்ந்த டாக்டர் ரிச்சார்ட் ஆர்ன்ட் ஆகியோர் பங்கு பற்றுவார்கள்.

# வடவியட்னும் போக்கு: ஜோன்ஸன் எச்சரிக்கை

வாஷிங்டன், ஜூலை 25

வியட்னும் நெருக்கடியை முடிவுக்குக்கொண்டுவருவதில் வடக்கு வியட்னும் பின்வாங்குமானுல் பெருந்தாக்குதல்கள் மூலம் மோசமான விளைவுகளை அது எதிர்நோக்க நேரிடுமென்று அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸன் எச்சரிக்கை செய்துள்ளார்.

பேச்சுவார்த்தைகள்மூலம் வியட்னும் நெருக்கடியைத் தீர்த்துவைக்க அமெரிக்கா தயாராகவிருக்கிறது. ஆனால் வடக்கு வியட்னும் தனது போக்கைத் தொடர்ந்து கடைப்பிடிக்குமானுல் விளைவுகளும் மோசமாகவிருக்குமென்று அதிபர் ஜோன்ஸன் தெரிவித்துள்ளார்.

# வியட்காங்கியரின் கடுமையானதாக்குதல்கள்

## 16 விமானங்கள் சேதம்

சைகோன், ஜூலை 25

தென்வியட்னுமில் வியட்காங்கியர் கடந்த இரு தினங்களில் கடுமையான முறையில் தாக்குதல்கள் நடத்தி பெருமளவில்சேதம் விளைவித்துள்ளனர்.

தென்வியட்னுமில் டானங் வடக்கை வியட்காங்கியர் நேற்று தாக்குதல்கள் நடத்தி இரண்டு பாலங்களை முற்ருகச் சேதப்படுத்தினர். அமெரிக்கத் தளமொன்றின்மீதும் அவர்கள் தாக்குதல்கள் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலினுல் மட்டும் பதினுறு அமெரிக்க விமானங்கள் சேதமடைந்தன.

### வடக்கில்

இதற்கிடையே அமெரிக்க விமானங்கள் நேற்று வடக்கு வியட்னுமில் தொடர்ந்து குண்டுமாரி பொழிந்திருக்கின்றன. நேற்றைய விமானத் தாக்குதலின்போது பல இராணுவ நிலைகளும் எண்ணெய் நிறுவனங்களும் நாசமாகின.

## யுதாண்ட்

லண்டன், ஜூலை 25

மாஸ்கோ செல்லும் வழியில் ஐ. நா. பிரதம காரியதரிசி யுதாண்ட் நேற்றிரவு இங்கு வந்து சேர்ந்தார்.

ரஷ்யத் தலைவர்களுடன் அவர் வியட்னும் நெருக்கடி குறித்து பேச்சுக்கள் நடத்துவார்.

## காஷ்மீர் கலாச்சார சங்கம்

ஸ்ரீநகர், ஜூலை 25

காஷ்மீர கலாச்சார சங்கமொன்று நேற்று இங்கு ஆரம்பித்துவைக்கப்பட்டது.

## கட்டாங்கியர் புரட்சி

கின்ஷாஷா, ஜூலை 25

கொங்கோவைச் சேர்ந்த கட்டாங்காவில் புரட்சி வீரர் கிசாங்கனி என்ற நகரைக் கைப்பற்றினர்.

புரட்சிக்காரருடன் பேச்சுவார்த்தைகள் நடத்த கொங்கோப் பிரதமர் லியனற்ரே முலாம்பா கிசாங்கனிக்கு நேற்றுச்சென்ருர்.

நகர் அமைதியாக இருப்பதாகவும் துப்பாக்கிச் சூடு எதுவும் நடைபெறவில்லையெனவும் கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. (பி.டி.ஸி.)

## பிரிட்டன் எச்சரிக்கை

லண்டன், ஜூலை 25

மேற்குஜேர்மனியிலிருந்து தனது படைகளைக் குறைப்பதன் சாத்தியக் கூறுகள் பற்றி பிரிட்டன் எச்சரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறது.

படைகளைப் பராமரிப்பதன் முழு அன்னிய செலாவணியையும் மேற்கு ஜேர்மன் அரசாங்கம் பொறுப்பேற்காத பட்சத்தில் பிரிட்டன் ஜேர்மனியிலுள்ள தனது படையணிகளை குறைத்துவிடப்போவதாக பிரிட்டிஷ் நிதி மந்திரி திரு ஜேம்ஸ் கலாகன் எச்சரிக்கை செய்திருக்கிருர்.

திரு. ஜேம்ஸ் கலாகன் மேற்கு ஜேர்மனியில், ஜேர்மன் நிதி மந்திரி டாக்டர் டால்கிரனை சந்தித்து பிரிட்டிஷ் படைகளை பராமரிப்பதற்கான அந்நிய செலாவணிப் பிரச்சினைகள் [illegible] ஆராய்ந்தார்.

# தமிழ் நாட்டுச் செய்திகள்

## 'காங்கிரஸை விட்டுவைக்கலமா?' ராஜாஜி கேட்கிருர்

சென்னை, ஜூலை 25

'ஒரு அரசியல்கட்சி தனது தோல்வியை ரூபாய் மதிப்பைக் குறைப்பதன்மூலம் ஒப்புக் கொண்டுவிட்டது. இனியும் அதை விட்டுவைக்கலாமா?' என்று சென்னையில் நடந்த கூட்டமொன்றில் பேசுகையில் ராஜாஜி கூறினுர்,

காங்கிரஸ் கட்சி நிர்வாகத்தில் தோல்விகண்டுவிட்டது. கடந்த 15 ஆண்டுகளாக தவருன பாதையில் சென்ருர்கள்! இப்போது அது ரூபாய் மதிப்புக்குறைப்பில் கொண்டுவந்துவிட்டது. அடிப்படை உரிமைகள் சட்டதிருத்தம்மூலம் துடைத் தெறியப்பட்டுவிட்டன' என்றும் அவர் சொன்னுர்,

## 'நடிகனல்ல நான் காங்கிரஸ் தொண்டன்'

-- ரஞ்சன்

தாம்பரம், ஜூலை 25

"நடிகர் ரஞ்சன் என்று என்னை அழைக்காதீர்கள்! காங்கிரஸ் தொண்டன் ரஞ்சன் என்று அழையுங்கள்" என்று நடிகர் ரஞ்சன் இங்கு நடந்த காமராஜர் பிறந்த தினவிழாவில் பேசுகையில் சொன்னுர்.

'நான் காங்கிரஸில் இன்று சேர்ந்தவன் அல்ல. 40 வருடங்களாகவே காங்கிரஸ் பற்றுக் கொண்டவன். நான் சிறுவனுக இருந்தபோது சென்னைக்கு வந்தேன். அப்போது ஒரு தடவை காந்தி சென்னைக்கு வந்தார். அப்போதே நான் பேசியிருக்கிறேன்" என்றும் ரஞ்சன் பேசுகையில் தெரிவித்தார்.

## 'மாணவர்களை மிரட்டக்கூடாது'

-- மொரார்ஜி

சென்னை, ஜூலை 25

'ஆசிரியர்கள் மாணவர்களை எடுத்ததற்கெல்லாம் மிரட்டக்கூடாது. மாணவர்களுக்கு ஆசிரியரிடம் ஏற்படும் பயத்தைத் தவிர்க்க வேண்டும்' என்று டில்லி அரசாங்க பழையமந்திரி மொரார்ஜிதேசாய் சென்னை வைஷ்ணவக் கல்லூரி பழைய மாணவர் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினுர்.

## ரூ. 3 லட்சத்தில் பெண்கள் பள்ளி

### தேவர் கட்டிக் கொடுப்பார்

கோவை, ஜூலை 25

பிரபல படத் தயாரிப்பாளரும், டைரக்டருமான சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர் கோவையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியொன்றைக் கட்ட மூன்றுரு. லட்சம் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார். தேவரின் சொந்த இடம் கோவை. இந்த இடத்திலேயே அவர் இந்தப் பள்ளியைக் கட்டிக் கொடுக்கவிருக்கிருர்.

# தாக்குதல் நீடித்தால் போர்மூளும்!

## இஸ்ரேலுக்கு சிரியா எச்சரிக்கை

நியுயோர்க், ஜூலை 25

இஸ்ரேலின் விமானத் தாக்குதல்கள் குறித்து ஸிரியா கடுமையாக எச்சரிக்கை செய்துள்ளது. தாக்குதல்களை இஸ்ரேல் தொடர்ந்து நீடிக்குமானுல் நிச்சயமாகப் போர் மூளும் என்று ஸிரியா அறிவித்துள்ளது.

ஸிரியாவின் அவசர கோரிக்கையின்மீது ஐ நா. பந்தோபஸ்து சபை இன்று கூடுகிறது.

"ஐ. நா. நீதியாக நடந்து கொள்ளத் தவறுமானுல் ஐ. நாவில் நாம் புகார் செய்வதும் இதுவே கடைசியாகவிருக்கும் என்று ஸிரியா தெரிவித்துள்ளது.

# வேலைநிறுத்தத்தில் பலாத்காரம்

லக்னெ. ஜூலை 25

உத்திரப் பிரதேசத்தில் அரசாங்க ஊழியர்களின் வேலைநிறுத்தம் தொடங்கி ஒன்பது நாளாகிய இன்று இரண்டு இடங்களில் சிறு பலாத்காரச் சம்பவங்கள் நடைபெற்றன.

இரு சம்பவங்களிலும் மாணவர்களே முக்கியமாகப் பங்குபற்றினர் பஸ்களுக்குக்கல்லெறிந்தும் கடைகளை மூடச்செய்தும் பலாத்காரத்தில் இறங்கிய மாணவர்களையும் மற்றும் கலகக்காரர்களையும் பொலிசார் தடியடி பிரயோகித்துக் கலைத்தனர்.

நான்கு அரசாங்க பஸ் டிரைவர்கள் காயப்பட்டனர். ஆறு பஸ்களும் பாதிக்கப்பட்டன. பொலிஸ் சுப்ரிண்டெண்ட் ஒருவரும், சில கான்ஸ்டபிள்களும் காயத்துக்குள்ளானுர்கள்

பலாத்கார ச் செயல்களில் ஈடுபட்டதற்காகப் பொலிசார் இதுவரை எழுபது பேரைக் கைதுசெய்தனர்.

## 2 விமானங்கள் வீழ்த்தப்பட்டன

ஹங்கொங், ஜூலை26

நேற்று வடக்கு வியட்னுமில் அமெரிக்க விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரண்டுவிமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்றும், விமானிகள் கைப்பற்றப்பட்டனர் என்றும் வடக்கு வியட்னும் அறிவித்துள்ளது.

இரண்டு விமானங்களும் விமானப்பீரங்கிகளினுல் சுடப்பட்டனவாம். (பி.டி.ஸி.)

## ஆர்ப்பாட்டம்

பீகிங், ஜூலை25

பத்தொன்பது சீன நகரங்களைச்சேர்ந்த ஐம்பது லட்சம்பேர், நேற்று வடக்கு வியட்னுமுக்கு ஆதரவுதெரிவித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். (பி.டி.ஸி.)

## உபதலைவர் ஏகமனதாகத் தெரிவு

நயினுதீவு தங்கள்

நயினுதீவு கிராமசபையிற் உபதலைவராக திரு. வி. கந்தசாமி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மக்களுக்குத் தொண்டுபுரிவதன் மூலம் கிடைக்கும் விசேஷ உரிமைகள்தான் எந்தக் காலத்திலும் அழியாமல் இருக்கும் வெறு அதிகாரச் சின்னங்களாகவுள்ள உரிமைகள் அனைத்தும் அழிந்துபோய்விடும்.— மகாத்மாகாந்தி

ஈழநாடு
EELANADU National Tamil Daily. Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna. Telephone : 389
பராபவ ஆடி 10 (26-7-66)

# சீரான நிர்வாகம்

அரசாங்க சேவைக்குத் தெரிவு செய்யப்பட்ட மொழியிலேயே அரசாங்க ஊழியர் வேலைசெய்வதற்கு அனுமதிமளிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையாயின், ஆட்சி மொழி, உத்தியோக மொழி, நிர்வாகமொழி எனப் பல வேறு பெயர்களால் அரசாங்க ஊழியருக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்டுள்ள குழப்பம் நீங்கி நிர்வாகம் சுமுகமாக நடைபெற வழி பிறக்கும்

அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் இப்பொழுது சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடத்தப்படுகின்றன 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்படுவதற்குமுன் ஆங்கிலத்தில் மட்டுமே அரசாங்க சேவைக்கான பரீட்சைகள் நடைபெற்றுவந்தன சிங்களம் மட்டும் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் அரசாங்க சேவையிலுள்ளோர் சிங்களத்தில் கருமமாற்ற வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 1956-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்களும் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது மந்திரிசபைத் தீர்மானங்கள் திறைசேரி சுற்று நிருபங்கள் என இது பெரும் பிரச்னையாக உருவெடுத்து. இன்றுவரையும் முற்றுகத் தீராத பிரச்னையாகவே இருந்து வருகிறது, தமிழ்மொழி உபயோகச் சட்டவிதிகள் நிறைவேற்றப்பட்ட போதிலும் அவை இன்னும் சரியான முறையில் அமுல் செய்யப்படவில்லை சிங்களம் மட்டும்சட்டம், தமிழ் உபயோக மொழிச் சட்டவிதிகளை அமுல் செய்வதிலுள்ளசிரமமும், இச்சட்ட விதிகளின் அமுல் சம்பந்தமாக அரசாங்க சேவையில் உயர் பதவியிலிருந்த சிலரும், இப்போது இருப்பவர் சிலரும் பின்பற்றும் முறைகளும் கொடுக்கும் வியாக்கியானங்களும்தான் நிர்வாக மொழி, ஆட்சி மொழி சம்பந்தமாக அரசாங்க ஊழியரையும், பொது மக்களையும் குழப்பத்திலாழ்த்தி அரசாங்க நிர்வாகம் சீராகவும் துரிதமாகவும் நடைபெறுவதற்கு இடையூறாகஇருந்து வந்திருக்கிறது.

'நிர்வாகம் துரிதமாக நடைபெற வேண்டுமென்றால்அது மக்கள்மொழியில் நடைபெறவேண்டும். வரலாற்றுக்காலம் முதல் நிர்வாகமொழி மக்கள் மொழியாகவே இருந்து வந்திருக்கிறது. ஆட்சி மொழி அதிகாரிகளுக்கிடையே பரிமாறலுக்காகவும் அரசு தனது கௌரவத்தைக் காப்பதற்காகவும்வேற்று நாடுகளுடன் தொடர்புகொள்ளும் மொழியாகவும் ஆட்சி மொழி இருந்துவந்திருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் மக்களின் சேவகர்கள் அவர்கள் மக்கள் மொழியில் நிர்வாகத்தை நடத்தத் தெரிந்திருக்கவேண்டும்' என்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் சில தினங்களுக்குமுன் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சிம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீது பேசுகையில் நிர்வாக மொழிக்கும் ஆட்சிமொழிக்கும் உள்ள வேறுபாடு பற்றி சரியான விளக்கம் கொடுத்திருந்தார்.

சிங்களம் பேசும் மக்கள் இந்நாட்டில் வாழும் பெரும் பான்மையினர். அதற்குஅடுத்ததாக இங்கு தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக வாழுகின்றனர். எனவே இந்நாட்டின் நிர்வாகம் சீராகவும் துரிதமாகவும் நடைபெறவேண்டுமாயின் இந்நாட்டு மக்களின் மொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் அரசாங்க நிர்வாக சேவை நடைபெறவேண்டும். உலகமொழியான ஆங்கிலத்தையும் இலங்கை புறக்கணித்துவிடமுடியாது. எனவே அரசாங்க சேவையிலுள்ளோர் தாம் சேவைக்குத் தெரிவுசெய்யப்பட்ட மொழியில் கடமையாற்ற அனுமதிப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருப்பின் இந்நாட்டு மக்கள் அதை நிச்சயம் வரவேற்பர். அரசாங்கசேவைக்குத் தெரிவு செய்யப்படுவோர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேர்ச்சிபெற்றிருக்க வேண்டுமென்ற நிபந்தனை ஏற்படுமாயின் இந்த மொழிப்பிரச்னையே இல்லாமல் போகும்.

# "கிழக்கு மாகாணத்திலேயே தமிழ்ப்பல்கலைக்கழகம்"

## வரவேற்புக்கூட்டத்தில் எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், செவ்.

''கிழக்கு மாகாணம் நீண்ட நிலப்பரப்பைக் கொண்டது. அது தமிழினத்தின்பொன்கொழிக்கும் பூமி அங்கேயே தமிழ்பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என முடிவுசெய்துள்ளோம்''

கல்வியங்காடு சந்தை மைதானத்தில் நல்லூர் எம். பி. டாக்டர் நாகநாதனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் தமிழரசுக்கட்சி தலைவர் திரு. எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### வடக்கு, கிழக்கை இணைத்தோம்

தமிழரசுக்கட்சி இதுவரை காலமும் சாதித்தது என்ன என்று இப்பொழுதும் சிலர் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். கிழக்கு மாகாணத்தையும், வடக்கு மாகாணத்தையும் ஒன்றுசேர்த்ததுதான் தமிழரசுக்கட்சியினரின் பெரிய சாதனை என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்பத்தில் குறைந்த பிரதிநிதிகளைக் கொண்ட எமது கட்சி இப்பொழுது கூடிய அளவுக்கு வளர்ந்துள்ள காரணத்தினாலேதான் நாம் இப்பொழுத ஓரளவுக்கு எமக்குத் தேவையானவற்றைப் பெறக்கூடியதாகவுள்ளது குறிப்பிட்ட ஒருபகுதி மக்களின் சேவையாளர்களல்ல நாம் இதைக் கிழக்கு மாகாண மக்கள் திட்டவட்டமாக நம்புகின்றார்கள். எனவேதான் நாம் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை கிழக்கே அமைக்க விரும்புகின்றோம்.

பல கலைகளும்கொண்ட ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகத்தையே நாம் விரும்புகின்றோம். விஞ்ஞானத்தை விட்டு ஒரு இந்துப் பல்கலைக் கழகத்தை நாம் தொடக்குவோமேயானல் அது முறையற்றசெயலாகும். இந்துப் பல்கலைக்கழகம் அமைக்கப் பட்டால் சைவமக்களுக்கு மட்டும் பயனளிக்கும் இப்பல்கலைக்கழகத்தால் சைவர்கள் மட்டும் பயனடைவார்களே தவிர தமிழ்மக்கள் அனைவரும் பயனடையமாட்டார்கள். எனவே எல்லோரும் சமஉரிமையுடன் சாதி சமயபேதமின்றி ஒன்றுசேரக்கூடிய ஒரு தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதை எல்லோரும் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

### பெரும் பொறுப்பு

நல்லூர் எம். பியும், தமிழரசுக்கட்சியின் புதிய தலைவருமான டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது:

''என் மேல் இப்பொழுது சுமத்தப்பட்டிருக்கும் பதவியினுல் எனக்கு மேலும் பல பொறுப்புகள் கூடியுள்ளன. காரணம் முன்னர் நாங்கள் அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதே எங்கள் வேலையாக இருந்தது. ஆனல் இன்றைய நிலைமையில் நாங்கள் அரசாங்கத்தில் ஒரு அங்கமாக இருக்கும் காரணத்தினுல்அரசாங்கத்திற்கு ஆதரவாகவும், தமிழரைப் பொறுத்தமட்டில் விழிப்புடனும் சகல உரிமைகளைப் பெறும் நோக்கத்துடனும் இருத்தலாகிய பெரும் பொறுப்புகளுக்கும், வேலைகளுக்கும் உள்ளாகியுள்ளோம். முன்னர் நாங்கள் எங்கள் பொருள், நேரம், உழைப்பு ஆகியவற்றையெல்லாம் இழந்தபோதும் தமிழர் உரிமைக்காகவே இழந்தோம் என்று எண்ணும்போது அளவிடமுடியாத மகிழ்ச்சியடைகிறேம்''.

வட்டுக்கோட்டை எம்.பி. திரு. ஏ. அமிர்தலிங்கம் பேசுகையில் ஒற்றுமைதான் எமது நோக்கம் என்றும் நாம் சமஷ்டிக் கொள்கைகளைக் கைவிடமாட்டோம் என்றும் தமிழர்முழுஉரிமை கிடைக்கும் வரையும் தொடர்ந்துபோராடுவோம் என்றும் சொன்னர்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம், புதுமைலோலன் உட்பட பலர் பேசினர்.

# செக்கோஸ்லோவேக்கியா - சமஷ்டி ஜேர்மன் குடியரசு உறவு

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் அரசாங்கம் சமீபத்தில் தங்களது அயல்நாடுகளுடன், குறிப்பாக செக்கோஸ்லோ வாக்கியாவுடன் உறவுகளைப்புதுப்பிக்க விரும்புவதாக அண்மையில் வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளது. அந்தச் சுற்றுநிருபத்தில் ''ஜேர்மனிய மக்கள் நல்ல அயலவர்களாக அயல்நாடுகளுடன் கிழக்கு ஐரோப்பியா நாடுகள் உட்பட சிநேகபாவத்துடன் வாழவிரும்புவதாகவும் செக்கோஸ்லோவாக்கியா மக்களுடன் சமாதானத்துடன் சகவாழ்வு நடாத்த தூண்டுகின்றது எனவும் தெரிவிக்கின்றது.

இந்த சுற்றுநிருபத்துக்கு செக் அரசாங்கத்தினர் மே மாதம் வெளியிட்ட அறிக்கையில் சமஷ்டி அரசாங்கத்தின் விருப்பத்திற்கேற்ப சாதகமான நடவடிக்கைகளில் செயல்முறையில் ஈடுபடவில்லை என்றும், அனேக பிரச்னைகளில் செக் நாட்டிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அறியக்[illegible]துள்ளது.

மே மாதம் 14-ம் திகதி இரண்டாவது உலகயுத்தத்தின் முடிவினை நினைவுகூறும் விழா ஒன்று பொன்னில் நடைபெற்றது. அதில் செக்கோஸ்லோ வாக்கியாவுக்கு அனுப்பிவைத்த சுற்றுநிருபத்தில் குறிப்பிட்ட அபிலாஷைகளுக்குஎதிர்மறையான கொள்கைகள் பிரதிபலிக்கப்பட்டன. வென்சல் ஜாக்குஸ்க் என்ற எஸ். பி. டி. இயக்கத்தின் பிரமுகர் ஒருவர் இக்கூட்டத்தில் செக்கோஸ்லோவாக்கியாவில் இன்று நிலவி வரும் ஆட்சிமுறையை உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கூடவலியுறுத்தினர்.

சமீபத்தில் மூனிச்சினில் நடைபெற்ற 'சடேற்-ஜேர்மன்' தினக்கூட்டத்தினில் சீபோஹிம் என்ற சமஷ்டி மந்திரி செக்கோஸ்லோவாக்கியாவின் எல்லைகள் எடுக்கப்படவேண்டும் எனவும், அது தங்களது நாட்டின் பிறப்புரிமை என்றும் தெரிவித்துள்ளார். எஸ். பி. டி. யின் உபதலைவரான பென்சல் ஜக்குஸ்க்கும் செக்[illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

# நாட்டிலும் நகரிலும்

இலங்கை வானொலியாருக்கு நாட்டுப்பாடல்களில் மறுபடியும் மோகம் ஏற்பட்டிருக்கிறது. மரபு முறை தவருது இப்பாடல்களைப் பாடக்கூடியவர்களை, பக்கவாத்தியங்களையும் அழைத்துக்கொண்டு, இசைப் பரிசோதனைக்கு வரும்படி கேட்டிருக்கிறார்கள். இந்த சோதனை கொழும்பில்தான் நடக்கும் என்று நாம் ஊகித்துக் கொள்ளுகிறேம். இதில் சித்தி பெறுபவர்களுக்கு இலங்கை வானொலியில் நாட்டுப்பாடல் பாட சந்தர்ப்பமும் (அதற்கேற்ற வேதனமும்) அளிக்கப்படுமாம்.

நமது வானெலியில் கிராமிய நிகழ்ச்சிகள் தோன்றிய 1951-ம் ஆண்டிலிருந்தே நாட்டுப்பாடல்களையும் நாட்டுக் கூத்துகளையும் பிரதிருபமாக சேகரிப்பதற்கும், ஒலிப்பதிவு செய்வதற்கும் பல முயற்சிகள் நடந்துள்ளன. ஒரு சமயம் இலங்கையிலுள்ள தமிழ்ப் பகுதிகள் எல்லாவற்றிலுமிருந்து காரியாதிகாரிகள் மூலம் எராளமான நாட்டுப் பாடல்களும் நாட்டுக்கூத்து பிரதிகளும் இலங்கை வானெலியாருக்கு கிடைத்தனவாம். இவற்றை பரிசிலனை செய்து பார்த்து மரபானது எது, போலி எது என்று பாகுபாடு செய்யும் பொறுப்பு ஒரு பிரபல தமிழ் வித்வானிடம் ஒப்படைக்கப்பட்டது. பிரதிகள் என்னவாயின், அவரிடமிருந்து திரும்பி இலங்கை வானெலிக்கு வந்தனவா என்பது சந்தேகமாயிருக்கிறது.

வானெலி உத்தியோகத்தர்கள் ஆடிக்கொரு தடவை ஆவணிக்கொரு தடவை கிராமப்புறங்களுக்குச் சென்று நாட்டுப்பாடல்களை ஒலிப்பதிவு செய்து வந்திருக்கிருர்கள். இதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. கிராமப்புறங்களில மின்சார வசதி இல்லாமை, கிராமியப் பாடல்களைப் பாடக்கூடிய ஆண், பெண்கள் ஒலி பதிவு செய்வதற்கு கூச்சபபடுதல், போல் தற்கால இயற்கைப் பாடல்கள் நாட்டுப்பாடல் போர்வையில் நுழைந்து விடுவது - இப்படி இன்னும் பல.

இப்பொழுது நாட்டுப் பாடல் பாடுவோரை தனியாகவும் கோஷ்டிகளாகவும் சோதனைக்கு வரும்படி இலங்கை வானெலி பத்திரிகை மூலமாகவும் வானெலி மூலமாகவும் அழைத்திருப்பது நல்ல யோசனை தான். ஆயினும் இந்த திட்டம் பூரணமான வெற்றி தருமா என்று சந்தேகப்படவேண்டியிருக்கிறது.

மயிலிட்டியில் மீன் தொழில் செய்பவருக்கும், மண்டூரில் கமம் செய்பவருக்கும், மணற்குளத்தில் காடு வெட்டிக்கொண்டிருப்பவருக்கும் இந்த அழைப்பைப் பற்றிய செய்தி எட்டுமோ என்பது சந்தேகம். கிராமவாசிகள், காரியாதிகாரி, கிராம சேவையாளர் முதலிய அரசாங்க உத்தியோகஸ்தர்களின் சொல்லைக் கேட்டு நடப்பவர்கள். அவர்கள் மூலம் இந்த அழைப்பை விடுத்திருக்கலாம்.

இரண்டாவது, நாலைந்து பேருடன் இந்தப் பரிசோதனைக்காக கொழும்புக்கு போய்வரும் செலவையும் அங்கே தங்கி நிற்கும் செலவையும் கருதி எத்தனை பேர் அசிரத்தையாய் இருப்பார்களோ? கிராமத்தவர்

(4ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

பலருக்கு கொழும்பு என்ன நிறமென்பதே தெரியாது. முன்பின் அறியாத சீமைக்குப் போய் வழி தவறிவிட்டால் என்ன செய்வது என்று பலர் பின்வாங்கக் கூடும்.

மரபு தவருத நாட்டுப் பாடல்களையும் நாட்டுக் கூத்துகளையும் வானெலியில் ஒலிபரப்ப வேண்டுமாயின் மேற்கூறிய சங்கடங்களைத் தவிர்க்கக்கூடிய முறையில் இலங்கை வானெலியினர் காரியாதிகாரிகள், கிராமசேவையாளர்கள், பிரதேச கலா மன்றம் போன்றவர்களையும், நாட்டுப்பாடல்களில் ஈடுபாடு கொண்டு உழைத்து வரும் தனிப்பட்டவர்களையும் தங்கள் உதவிக்கு அழைத்திருக்கலாம். பத்திரிகை, வானெலி விளம்பரத்தின் மூலம் கிராமவாசிகள் தங்கள் வயிற்றுப் பிழைப்பை விட்டு விட்டு தம் சொந்த செலவில் கொழும்புக்குப் போய் வர ஒப்புக்கொள்வார்கள் என்று நினைப்பது சற்றே மிகைப்பட்டதோர் நம்பிக்கையாக எனக்குப் படுகிறது.

— வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “திருமுறை விழாக்களினால் பக்தியைப் பரப்ப வேண்டும்”

சாவகச்சேரி, திங்கள்

“நாம் சமய உண்மைகளை உணர்ந்து சமய ஆசாரப்படி ஒழுகி ஆன்மஈடேற்றம் பெற வேண்டும் நாயன்மார்கள் கூட ஈஸ்வரதியானத்தாலேயே ஈஸ்வரனை அடைந்தனர்.

இவ்வாறு தென்மராட்சி காரியாதிகாரி திரு. இ. சிதம்பரப்பிள்ளை கோயிலாக்கண்டி மாலட்சுமி வித்தியாசாலை மண்டபத்தில் நடந்த திருமுறைவிழா முதலாம்நாள் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

மாணவர்கள் கோவில், தந்தை, ஆசிரியர் ஆகியோர்களை குருவாகப் பாவிக்க வேண்டும். தொண்டர்களே பெரியவர்கள். இறைவன் தொண்டர்களுக்குள் அடங்குவர். கடவுள் பக்தி எம்மை முன்னேற்றும். இவ்வரிய மானிடப் பிறவியை அடைந்த நாம் உண்டு உறங்காது எமது ஆன்மா ஈடேற தியானிக்க வேண்டும். நாம் தவக்குழந்தைகளைப் பெற மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றின் வழி சிந்தித்து வாழ வேண்டும். இக்கால விஞ்ஞானிகளைப் போலல்லாது சுந்தரர் போகதிருஷ்டியாலேயே கைலாயம் சென்றார். ஆகவே இறைவன் சிந்தனையால் அடுத்த பிறவியிலும் முன்னேற நாம் இப்படிப்பட்ட விழாக்கள் எடுத்தும் நம் சமுதாயத்திடையே ஈஸ்வரப்பக்தியைப் பரப்ப வேண்டும்.

‘சைவத்தின் மகிமைகள்’ என்பதுபற்றி விரிவுரை நிகழ்த்திய திரு. இ. வைத்திலிங்கம் கூறியதாவது: சைவசமயம் ஆதியற்றது மற்றச் சம்பவங்கள் போன்று மனிதரால் உண்டாக்கப்பட்டதல்ல. உலகில் எல்லா நாடுகளிலும் ஆரியர் இலங்கைக்கு வர முன்பே சைவசமயம் பரவியிருந்தது; நாயன்மார் நால்வரும் நாலுமார்க்கம்மூலம் ஒழுகி ஞானம் பெற்றனர். அதனால் இறைவனை அடைந்தனர்.

சைவப்புலவர் க. கணபதிப்பிள்ளை திருமுறைகளின் பெருமை என்பது பற்றிப் பேசினார்.

பண்டிதை செல்வி தவமலர் சின்னத்துரை, திரு பொன்னம்பலம், திரு. வே. சிவசுப்பிரமணியம், திரு. தம்பிப்பிள்ளை, திரு. வி. மாணிக்கவாசகர் மற்றும் பலரும் பேசினர். கைதடி, நாவற்குளி, பாடசாலை மாணவ மாணவிகளின் இன்னிசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# ‘தமிழ்மொழி தெய்வமகிமை பொருந்தியது’

உடுப்பிட்டி, திங்கள்

“இறந்த பெரியோர்களை எப்போதும் நினைவில் வைத்து அவர்களைப் போற்றுவதே தமிழனின் சிறந்த பண்பாகும். இதற்காகவே தமிழனை உலகம் போற்றுகிறது” என்று நீதியரசர் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா கியு.ஸி. சொன்னார். வடமராட்சி காரியாதிகாரியாக இருந்தவரும், கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி ஸ்தாபகருமான காலஞ்சென்ற இராசாவசல் முதலியார் திரு க. சின்னத்தம்பி நினைவுவிழா மேற்படி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது டாக்டர் தம்பையா தலைமைவகித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். பண்டிதர் இ. க. முருகேசு வரவேற்புரை கூறினார்.

நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா மேலும் குறிப்பிட்டதாவது:—

“நான் திரு. சின்னத்தம்பி முதலியாரின் குடும்பத்துடன் நெருங்கிப்பழகியவன். இதனால் முதலியாரது குணாதிசயங்களை நன்கறிந்துகொள்ளும்வாய்ப்பைப்பெற்றேன். இவருடைய பேரன் திரு. மு சிவசிதம்பரம் இப்பகுதியின் எம்.பி. யாக இருக்கிறார். முதலியாரவர்கள் கல்வியும் சமயமும் வளரச்சிறந்தபணியாற்றினார்கள் இவர் அமைதியாகவே சமூகப்பணிகளில் ஈடுபட்டுழைத்தார். நாம் பணிகள்பல செய்வதன் மூலமே எம்மினத்தை ஈடேற்றலாம். தமிழர் பண்பாடும், தமிழ்மொழியும் தெய்வமகிமை பொருந்தியது. தமிழர் தம்முள்ளத்தில் சிறந்த பண்பாடுகளைக் கொள்ள வேண்டும். பெரியோர்கட்டு விழா எடுக்கும் நாம் அவர்களின் பெருமைகளை நன்குணர்ந்து, அவர்களைப்போல வாழ முன்வர வேண்டும்”.

முன்னாள் வடபகுதி உதவி வித்தியாதிபதி திரு. கே. எஸ் அருள்நந்தி திருவாளர்கள் திருவாளர்கள் பொன் கணேசன், வழக்கறிஞர் திரு எஸ் செல்லத்தம்பி உட்பட இன்னும்பலர் பேசினர்.

# ‘பல்கலைக்கழகத்தின் பெயரால் எமது ஐக்கியம் குலையக்கூடாது’

## பெற்றோர்தின விழாவில் எம். பி. கோரிக்கை

சங்கானை, திங்.

“சுதந்திர இந்தியாவில் மதத்தின் பெயரால் பல்கலைக்கழகம் இயங்குவது தவறானது என்று உணர்ந்து காசி இந்துப் பல்கலைக்கழகத்தை மாளவியா பல்கலைக்கழகம் என மாற்றியமைத்தனர். ஆனால் எம்மில் சிலர் இந்த இருபதாம் நூற்றாண்டிலும் மதத்தின் பெயரால் பல்கலைக் கழகம்வேண்டுமெனக் கேட்கின்றார்கள். நாட்டிலே இப்பொழுதுதான் சமூக, இன, மத வேற்றுமைகள் அகன்று தேசிய உணர்ச்சி அரும்புவிடுகின்றது. இந்தவேளையில் சாதி, சமய வேற்றுமைகளைக்கிளப்பும் சக்திகளை மக்கள் உணர்ந்து நிச்சயம் எதிர்ப்பார்கள். ஈழத்தமிழர் ஒற்றுமையாக இயங்கினால் தான் நன்மையுண்டு. பல்கலைககழகம் என்ற பெயரால் யாழ்ப்பாணத் தமிழன், கிறிஸ்தவத் தமிழன், இந்துத்தமிழன் என்று எம்மில் பேதம் வளர்த்து ஐக்கியத்தைக் குலைக்க வேண்டாம்” என்று வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் சங்கானை அ. மி. பாடசாலைப் பெற்றோர் தினவிழாவுக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: ‘இயற்கை வளங்கள் குறைந்த பகுதியில் வாழ்ந்த தமிழன் மூளைவளத்தைப் பயன்படுத்தியே உழைத்து வந்தான். வேலையில்லாத் திண்டாட்டம் குறிப்பாகப் படித்தவர்களிடையே பரவி வரும் இந்நாளில், தமிழர்கள் பொறியியல், தொழில்நுட்பம் முதலியவற்றைப் படிக்கக்கூடிய பல்கலைக் கழகமே அவசியம்”

பட்டினசபைத் தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் பேசுகையில், “நாட்டின் முதுகெலும்பு போன்றவர்கள் ஆசிரியர்கள். எந்தக் கல்வித் திட்டமென்றாலும் நடைமுறைக்குக் கொண்டு வருபவர்கள் அவர்களே. கல்விபற்றிய பல சிக்கல்களையும் உணர்ந்த ஆசிரியர்களைக் கலந்தாலோசியாமல் அமைச்சர் கல்விமசோதா கொண்டுவந்தது தவறாகும். அவர்களுடைய ஆலோசனைகளை உள்ளடக்கிய திருத்தங்களையும் ஏற்றுக் கொள்ள அமைச்சர் முன்வரவேண்டும் என்று கூறினார்.

வட்டார வித்தியாதரிசி திரு. சி. சபாபதி பேசுகையில், கைத்தொழிலை வளர்க்கக்கூடிய கல்வியை நாம் ஆதரிக்கவேண்டும். யாழ்ப்பாண மக்கள்பனம்பொருட்களை மறந்ததால் பல துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள். பனம் பழத்தை குழந்தைகள் சாப்பிடுவதால் பயோறியா, குடல் அழுக்குப்போன்ற பல வியாதிகள் இதனால் தீரும் என்று கூறினார்.

# மோட்டார்கார் விபத்து வழக்கு: எதிரி விடுதலை

பருத்தித்துறை, திங்கள்

மோட்டார் கார் விபத்து வழக்கொன்றில் எதிரி விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வழக்கில் கவனக் குறைவினால் மோட்டார் கார் செலுத்தி தும்பளையைச் சேர்ந்த மரியதாஸ் என்பவருக்கு கடந்த ஏப்ரல் மாதம் 24ந் திகதி மரணம் விளைவித்ததாக பருத்தித்துறையைச் சேர்ந்த கே. நாராயணசாமி என்பவர் மீது குற்றஞ்சாட்டியிருந்தது. இவ்வழக்கு விசாரணை இன்று பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. றொபர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபொழுது சாட்சியங்கள் முரண்பாடாக இருந்ததாகத் தெரிவித்து மாஜிஸ்டிரேட் எதிரியை விடுதலை செய்தார்.

எதிரிசார்பில் அட்வகேட் ரி. கணேசலிங்கம், என். நடராசா வி. செல்லத்தம்பி, வி. பி. சுந்தரலிங்கம் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். காங்கேசன்துறை தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் மூர்த்தி, புரக்டர் ஞானச்சந்திரனின் உதவியுடன் வழக்காளி தரப்பில் ஆஜரானார்.

## ஆசிரியர் குழு எம். பியை சந்தித்தது

வல்வெட்டித்துறை, திங்கள்

வடமராட்சி தமிழாசிரிய சங்க தூதுக்குழுவொன்று சங்கத் தலைவர் திரு ஏ. கணபதிப்பிள்ளை தலைமையில் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்தைச் சந்தித்து மகஜரொன்றைச் சமர்ப்பித்துள்ளது.

தராதரப் பத்திர ஆசிரியர் சம்பளக் குறைபாடுகள் அனைத்தையும் நீக்க வேண்டும், சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கு அரசாங்கம் சுவீகரித்த திகதியிலிருந்து முதல் நியமனத்தை வழங்கிய சிங்கள தேர்ச்சி நிபந்தனை அகற்றப்பட்டு தனிமுகாமையில் சேர்ந்த திகதியையே முதல்நியமனமாகக்கொள்ள வேண்டும். கல்வி வெள்ளை அறிக்கையின்படி ஆசிரியர் லீவுகள் குறைக்கப்படுதல் போன்ற மற்றும் விஷயங்களை ஆசிரிய சங்க ஆலோசனையின் பிரகாரமே அரசாங்கம் அமுல் செய்தல் வேண்டும்” என்று அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. பொன்னம்பலம் தம்மைச் சந்தித்த குழுவினருக்கு ஏற்ற நடவடிக்கைகளை செய்து தருவதாக வாக்களித்துள்ளார்.

## எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, ஞாயிறு

பருத்தித்துறையை சேர்ந்த கந்தசாமி நாராயணசாமி என்பவர் கடந்த சித்திரை மாதம் 25-ந் திகதி பற்கோவளம் பிரதான வீதி வழியால் சென்று கொண்டிருந்த சூசைப்பிள்ளை மரியதாஸ் என்பவரை காரினால் மோதிக் கொலைசெய்ததாக பருத்தித்துறை பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்திரேட் திரு றொபேர்ட்சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை சுற்றவாளியாகக் கண்டு விடுதலை செய்தார். எதிரிசார்பில் வழக்கறிஞர்கள் திரு. என். நடராசா, திரு. வி. செல்லத்தம்பி, திரு வி. பி. சுந்தரலிங்கம் அனுசரணையுடன் அட்வக்கேற் திரு. ரி. கணேசலிங்கம் ஆஜரானார் பொலிஸ் தரப்பில் காங்கேசன்துறை தலைமை காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. என். வி. மூர்த்தி வழக்கை நடத்தினார்.

## கல்வி வளர்ச்சி கழகம்

ஊர்காவற்றுறை, திங்

புங்குடுதீவில் கல்வி வளர்ச்சியை நோக்கமாகக்கொண்ட கல்விவளர்ச்சிக்கழகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் பயன்படத்தக்க நூல்நிலையம் ஒன்றை இங்குவிரைவில் நிறுவ இந்தக் கழகம் நடவடிக்கை மேற்கொள்ள விருக்கிறது

பின்வருவோர் கழகத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. கா மதியாபரணம், காரியதரிசி: திரு ச தெட்சணாமூர்த்தி, தனாதிகாரி: திரு. அ. யோ. பூராசா.

## ஜாதிககுரு பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்

ஸ்ரீலங்கா ஜாதிககுரு சங்கத்தின் யாழ். கிளை பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாண ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறும்.

யாழ்ப்பாணம். திங்கள்

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் அதிபர் திரு பி. மகேந்திரன் அடுத்தமாதம் 1ம் திகதிமுதல் நுவரெலிய மாவட்டத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(ந. நி)

## புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகிகள் வருமாறு:

தலைவர்: [illegible] செல்லத்துரை, காரியதரிசி: மா. குமாரசாமி. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

# கரையோரப் பகுதிகளில் வள்ளம் திருத்தும் நிலையங்கள்

## மீன்பிடி கார்ப்பரேஷன் நிறுவுகிறது

கொழும்பு, திங்கள்

கரையோரப் பகுதிகளில் மீன்பிடி கார்ப்பரேஷன் பத்து வள்ளம் திருத்தும் நிலையங்களை நிறுவவிருக்கிறது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன.

மீன்பிடி வள்ளங்களின் உதிரிப்பாகங்களைக் குறைந்த விலைக்கு இந்தநிலையங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆழ்கடலில் மீன் பிடிக்கச்சென்று பழுதடையும் மீன்பிடி வள்ளங்களை இந்த நிலையங்களில் குறைந்த செலவில் விரைவாகத் திருத்திக்கொள்ள முடியுமென்றும் இதனால் மீனவர்கள் அதிக நன்மையடைய முடியுமென்றும் சொல்லப்படுகிறது.

## செக்கோஸ்லோவாக்கியா ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பல பொருளாதார நிர்ப்பந்தங்களுக்கு ஏற்படுத்த வேண்டும் என்றும், அத்துடன் அநேக செக் தலைவர்களையும் கண்டித்தார்.

சமஷ்டி ஜேர்மன் குடியரசின் சுற்று நிருபத்தின் கிழக்கு ஐரோப்பியா நாடுகளுடனும் செக்கோஸ்லோவாக்கியாவுடனும் உறவு பூணவேண்டும் என்ற குறிப்பு அவர்களது கொள்கைகளுக்கு உண்மையில் எதிர்மறையானது. ஜேர்மனியர்கள் கொள்கைகளை மேலும் ஊர்ஜிதம் செய்வது போல அவர்கள் செக்கோஸ்லோவாக்கியாவின் மேல் காட்டும்குரோதமும் கடந்த இரண்டுமாதங்களாக செக் நாட்டிற்கு விரோதமான இயக்கங்களுக்குக் கொடுக்கும் எனவும் செக் நாட்டுச் செய்திஸ்தாபனங்கள் குறிப்பிடுகின்றன.

## சங்கானை

## தொழிற்சாலைக்கு ஒரு பிரச்னை!

சங்கானை, திங்கள்

இப்பகுதிக்கு மின்சாரமில்லாத காரணத்தால் கடந்த நான்கு வருடகாலமாக இயங்க முடியாதிருந்த சங்கானை ஐக்கிய மட்கல அபிவிருத்திச்சங்க தொழிற்சாலைக்கு இப்போது புதிய பிரச்னை ஒன்று ஏற்பட்டுள்ளது. இம்மாத இறுதியில் சங்கானைப்பகுதிக்குமின்சார விநியோகம்கிடைப்பது உறுதியாகி விட்டபோதிலும் இத்தொழிற்சாலைக்கான மின்சாரத்தொடர்பை ஏற்படுத்தவேண்டிய பூர்வாங்க வேலைகளை செய்து தருமாறு தொழிற் சாலையினர் குடிசைக்கைத்தொழில் இலாகாவைக் கேட்டிருந்தும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்!

மின்சாரத் தொடர்பு இந்தத் தொழிற்சாலைக்குக் கிடைத்ததும் பீங்கான் கோப்பைகள், பூச்சட்டிகள் போன்ற நாகரீகமான, தேவையான பொருட்கள் கிடைக்கக்கூடியதாகவிருக்குமென ஐக்கிய மட்கல அபிவிருத்திச் சங்கத்தை சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார். இத்தொழிற்சாலை இயங்கத் தொடங்கியதும் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்படுமெனத் தெரிகிறது.

வியாபாரம் பெருக
விளம்பரம்செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் வயல்

## செய்யும் தொழில்மூலம் ஆன்மஞானம்

— வினோபாஜி —

உங்களில் பலரிடம் "கீதைப் பேருரைகள்" என்ற புத்தகம் இருக்குமென்று நினைக்கிறேன. அதன் இறுதியில் டாடு சொன்னதாகப் பின்வரும் கதை வந்திருக்கிறது. வில்வில் பூட்டியுள்ள நரம்பு என்ன சால்கிறது? ஆடு என்ன சொல்கிறது? ஆட்டின் குடலிலிருந்தே பஞ்சு கொட்டும் வில்லில் பூட்டப்படும் நரம்பு தயாரிக்கப்படுகிறது. அந்த ஆடு 'மே', 'மே', 'மே' (நான், நான், நான்) என்று கத்துகிறது இது அதன் ஆணவத்தைக் காட்டுகிறது. அதன் உயிர் நீங்கி, ஆணவம் மறைந்து போகையில் அதன் குடலைக் கொண்டு கயிறு முறுக்கி அதை வில்லில் பூட்டுகிறார்கள். அந்த வில்லின் நாணை இழுத்து, பஞ்சை அடிக்கையில் துஹீ துஹீ துஹீ (நீயே, நீயே, நீயே) என்று ஒலிக்கிறது. அதாவது, 'எல்லாம் நீயே, நீயே' உலகில் இருப்பது எல்லாம் கடவுளே, வேறு எதுவுமே யில்லையென்று அது அறுதியிட்டுக் கூறுகிறது நீயே நீயே என்று அது கூறுவது கடவுளை. உலகில் கடவுளைத் தவிர வேறு எதுவுமே இல்லை என்ற தத்துவத்தை அது நமக்கு உணர்த்துகிறது. டாடு பஞ்சுகொட்டுவதைத் தன் பிழைப்பாய்] வைத்துக் கொண்டிருந்த பக்தர். இதனால் அவர் தன் தொழிலின் மூலம், தன் தொழிலுக்கு முக்கியமாய் பயன் பட்டக் கருவியின் மூலம், ஆன்ம ஞானத்தைப் போதிக்கிறார். இதே போல மகான்கள் எல்லோரும் எவ்வளவோ போதித்திருக்கிறார்கள்.

### கபீர்தாசர்

கபீர்தாசர் நெசவுத் தொழில் செய்து வந்தவர். இதனால் அவர் தமது தொழிலில் பயிலும் மொழியைச் கொண்டே.

ஜீனீ ஜீனீ ஜீனீ சதரியா, ஜீனீ ஜீனீ ஜீனீ (மெல்ல மெல்ல போர்வையை நெய்தேன்) என்று தத்துவ ஞானத்தை விளக்குகிறார்.

### ஒரு தொழில் மூலம் எல்லாவற்றையுமா?

இவ்வாறு மகான்களெல்லோரும் செய்து வந்த தொழில் பயிலும் சொற்களைக் கொண்டே பெரியதத்துவங்களை, ஆன்ம ஞானத்தை நமக்கு விளக்கியிருக்கிறார்கள். ஆதாரக்கல்வி பற்றிய இந்தக்குறிப்புகள் எல்லாமே மகான்களின் வாழ்க்கையை உற்று நோக்கினால் நமக்குக் கிடைக்கும். ஆனால் எல்லா வகை அறிவையும் விஞ்ஞானத்தையும் பஞ்சு கொட்டும் வில்லைக் கொண்டும் இராட்டைகள் மூலமாகவும் விளக்கிச் சொல்லிவிடலாம், பிள்ளைகளுக்குப் போதித்து விடலாம் என்பது அல்ல. சிலவற்றை விளக்குவதற்கு இராட்டையும் பஞ்சு கொட்டும் வில்லும் பெரிதும் உதவுபவையாயிருந்தால், வேறு சிலவற்றிற்கு விவசாயம், உதவக்கூடியதாய் இருக்கும். இரசாயன சாத்திரம் போதிப்பதென்றால் அதற்கு உங்கள் 'அன்னபூர்ணா' (சமையலறை) நன்கு பயன்படும். உணவுத் தானிய வகைகள், காய்கறிகள் ஆகியவைகளிலுள்ள சத்துக்களை விளக்கிச்சொல்வதற்கு உங்கள் உணவு விடுதி உதவக்கூடும். அங்கே சோறு சமைக்கிறார்கள் அல்லவா? அரிசியைக் கழுவி உலையிலிட்டு அது வெந்ததும் அதிலுள்ள கஞ்சியையெல்லாம் தனியே வடித்தெடுத்து, மாடு கன்றுகளுக்கு வைத்துவிட்டுவெறும் சோற்றைப் புத்திசாலிகளான மக்கள் சாப்பிடுகிறார்கள்!

### சமயலறைக் கல்வி

எனக்கு இப்போது ஒரு கதை நினைவிற்கு வருகிறது. அது மராத்தியர்களின் வரலாற்றில் வருவது. காரன் வாலிஸ் பிரபுவின் தலைமையிலிருந்த ஆங்கிலேயர் படையும் மராத்திய பேஷ்வாவின் படையும் ஒன்றாய்ச் சேர்ந்து திப்புசுல்தானை எதிர்த்துப்போரிட்டுவெற்றி பெற்றன. அங்கே அவர்களிடம் இருந்த அரிசிமிகவும் குறைவாயிருக்க, ஆட்கள் அதிகமாயிருந்தார்கள். இதனால் மராத்தியர்களும் காரன்வாலிஸின் கீழிருந்த வெள்ளையர்களுமாகத் தம்மிடமுள்ள அரிசியைச் சமைத்து அதிலிருந்து வடித்த கஞ்சியை வெள்ளையர்கள் எடுத்துக்கொள்வதென்றும் கீழே தங்கும் சோற்றை மாத்திரம் சாப்பிடுவதென்றும் பேசிமுடிவு செய்து கொண்டார்கள். இப்பொழுதோ அந்தக்காரன்வாலிஸின் படையின்இடத்தை நமதுபசுக்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. அரிசியிலுள்ள சத்தெல்லாம் கஞ்சியில் போய்விடுகிறது. கஞ்சி நீக்கிய வெறும்சக்கை சோறு என்பது மராத்தியர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இதைநாம்இப்போது நமதுசமயலறையைப் பயன்படுத்தி [illegible] போதிக்கலாம்.

—நன்றி கிராமராஜ்யம்.

---

குஞ்சியப்பு பேசுகிறார்

## கோழிமேச்சாலும்...

எனக்கு உங்களோட கதைக்கிறதென்றால் சரியான விருப்பம் அதான் கண்டியளோ எப்பொழுதும் உதால போசவரேக்க நின்று கதைக்கிறனான். இன்றைக்கு எனக்கு டிங்கிக் காச்சல் போல கிடக்கு என்றாலும் ஒருவிசயம் சொல்லவேணும் சொல்லிவிட்டுப்போறன்.

இப்பகண்டியளோ, எங்கடநாட்'டில வேலையில்லாத் திண்டாட்டம் இமயம்போல வளர்ந்திருக்காம். வேலையில்லாத எல்லாரும் கோழிமேச்சாலும் கோரணமந்திலை மேச்சவேடும் என்ற நினைப்பில இருக்கினம். எஸ். எஸ். ஸி. படிச்சவனுக்கு கோரணமெந்தில கோழி மேக்க வெக்கம். கோழி மேக்கிற இடத்திலையும் கிளார்க் வேலைதான் வேணுமாம். பி.எஸ். சி படிச்சவவனுக்கு கிளார்க் வேலை வெக்கமாம் மனேசர் வேலை வேண்டுமாம் இப்படி எல்லாரும் ஒற்றக்காலில் நின்றுபிடிவாதம் பிடிச்சா அரசாங்கம் தான் என்ன செய்யுறது. இளசுகள் எல்லாம் தனிப்பட்ட முறையில் வேலைகளில் ஈடுபட வேண்டும். அதில் கஷ்டப்பட்டு உழைத்தால் நல்ல முன்னேற்றம் கிடைக்கும். நான் சொல்லுறது சிலபேருக்கு பிடிக்காதுதான் ஆனால் ஒன்று இவர்களைக்கேக்க ஆசையா இருக்கு அமெரிக்கர், ஜேர்மனியர் ஏன் எங்கட ஜப்பானியர் எல்லாம் என்னென்று முன்னேறியவயல் அவர்களுக்கு மட்டும் ஒரு ஆற்றலைக் கடவுள் இரகசியமாகக் கொடுத்தவரே. இல்லை இல்லை அவர்கள் சொந்த முயற்சியால முன்னேறியவர்கள். அதை நாமும் கடைப்பிடிக்கவேண்டும். தன்கையே தனக்குதவி

சரி நேரமாய்ப்போச்சு பரிபாரியிடமும் போகவேண்டும் பின்னப் பொயிற்று வாரல்...

---

## உங்களில சிலர்

**அன்புள்ள வாசகர்களே!**

உங்களில் சிலர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்கள். முழுக்கடிதங்களையும் பிரசுரிப்பதற்கு வசதியில்லாதிருப்பதால் சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

### புதிய அம்சம்வேண்டும்

அநேக வணக்கங்கள். தொடர்ந்து பொன்வயல் படித்து மகிழ்கிறேன். வாராவாரம் பொன் வயல் முன்னேறி வருவது கண்டு மிக மகிழ்ச்சி. தொடர்ந்தும் பொன் வயல் பல புதிய அம்சங்களுடன் வெளிவரவேண்டுமெனவிரும்புகின்றேன்.

—நா நகுலேந்திரன்,
பொல்கேன்கொட வீதி,
நுகேகொடை.

ஃ ஃ ஃ

### எதிர்பார்க்கின்றேன்

எண்கள்புரியும் சர்க்கஸ் என்னும் கட்டுரையைத் தொடர்பாக வாசித்தறிந்தேன். அதுபோன்ற உடலியல், உளவியல் சம்பந்தமான கட்டுரைகளைத்தொடர்ந்து ஈழநாட்டில் எதிர்பார்க்கின்றேன்.

மு. க. கமலக்கண்ணன்,
கொற்றாவத்தை,
வல்வெட்டித்துறை.

ஃ ஃ ஃ

### நன்றாக வாசித்தேன்

மனிதவாழ்வில் எண்கள் புரியும் 'சர்க்கஸ்' என்று 5 தொடரை எழுதியவருக்கு எனது உள்ளப்பூர்வமான பாராட்டுகளைத் தெரிவிக்கின்றேன். 5 தொடர் கட்டுரைகளையும் நன்றாக வாசித்தறிந்தேன். அவருக்கு என் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

—சி. கந்தசாமி,
தென்புலோலியூர்.

ஃ ஃ ஃ

### பாக்கியசாலிகள்

யாழ்ப்பாண மக்கள் பாக்கியசாலிகள். தமிழ்ப் பிரமுகர்களால் நடத்தப்படும் தமிழ் தினசரியை வாசித்து மகிழும் வாய்ப்பைப்பெற்றிருக்கிறார்கள். பொன்வயலுக்கு என் ஆசிகள்.

வி. எஸ். மணியம்,
இறக்குவானை.

ஃ ஃ ஃ

### எப்போ கிடைக்கும்?

பொன்வயல் பார்த்தேன். நல்லபல அம்சங்களைக்கொண்டு வெளிவருகின்றது ஆனால் 'ஈழநாடு' எம்பகுதியில் தொடர்பாகக்கிடைப்பதில்லை. இங்கே 'ஈழநாடு' தினசரி தொடர்பாக எப்போது கிடைக்கும்?

—எல். நாச்சிமுத்து,
கிரியெல்லைதோட்டம்,
இரத்தினபுரி.

ஃ ஃ ஃ

### வார மலராவது

'ஈழநாடு' பத்திரிகையில் பொன் வயல் பகுதிக்கு என்பாராட்டு. இங்கு பத்திரிகை தொடர்பாக தினசரி கிடைக்கவழி செய்ய முடியாவிட்டால் வாரமலராவது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யுங்களேன்.

சி. வெ. ராமையா,
பதுளை.

---

கற்பனைச் சித்திரம்

## சட்டம், சட்டைப் பைக்குள் அடக்கம்!

ஜவுளிக்கடையின் எதிரே கார் ஒன்று வந்துநிற்கின்றது. அந்தக்காரிலிருந்து 'அப்சரஸ்' போல ஒரு அழகான மங்கை இறங்குகிறாள். 'வெங்காயச்' சருகுச் சேலை 'சரசர' வென ஓசை எழுப்ப, ஒய்யாரமாகப் படியேறி கடைக்குள் நுழைகிறாள். மீன்விழிகள் கடையின் அலமாரிகளுக்குள்ளே ஊடுருவிப் பாய்ந்து திரும்புகின்றன.

உலகத்தையே பறிகொடுத்தவர்போல் முகத்தை வைத்துக்கொண்டிருக்கும் கடைச்சிப்பந்தியொருவர் சிரமப்பட்டு புன்னகையொன்றை வரவழைத்துக்கொண்டு அப்பெண்மணி முன்னால் வந்து நின்று "என்னவேண்டும்" என்கிறார். "சேலை இருக்கிறதா" பெண்மணியின் பதில் கேள்வி.

"ஓ இருக்கிறதே! என்ன சேலை வேண்டும் உங்களுக்கு?"

"மணிப்புரி அல்லது காஞ்சிபுரம்"

"கூப்பனுக்கென்றால் இல்லை"

"கூப்பன் இல்லாமல்..."

"கூப்பன் இல்லாமல் என்றால் இருக்கிறது"

"எங்கே வைத்திருக்கிறீர்கள், காட்டுங்கள் பார்ப்பம்"

"அப்படிக் காட்டுவதற்கில்லை, வேண்டுமென்றால் சொல்லுங்கள் கொண்டு வந்துகொடுக்கலாம்"

"என்ன விலை?"

"எல்லாம் பழைய விலைதான்"

அப்பெண்மணி கடையை மீண்டும் ஒரு நோட்டமிடுகிறாள். கடையின் உட்புறமாக உள்ள ஒரு மேசையின் அருகே ஒரு உருவம் பிடித்துவைத்த பிள்ளையாரைப்போல அமர்ந்து இருக்கின்றது? அவர்களையே பார்த்தபடி.

அரசமரத்தடி பிள்ளையார் வெறும் கொளுக்கட்டையைத்தானே விழுங்கிவிட்டு உட்கார்ந்திருப்பார்! ஆனால் இந்த ஆசாமி, அரசாங்கம் வெளியிட்டுள்ள, ஜவுளி சட்டங்கள், அறிவித்தல்கள், 'கஸட்' பத்திரங்கள் எல்லாவற்றையும் அல்லவா விழுங்கி ஏப்பம் விட்டுவிட்டு உட்கார்ந்திருக்கிறது! சட்டமாவது மண்ணாங்கட்டியாவது எல்லாம் அவருடைய சட்டைப்பைக்குள் அடக்கம். சட்டத்தை அமுல் நடத்துவதற்காக யாராவது அதிகாரிவந்தால் அவரையும் பிடித்து அப்படியே

(7-ம் பக்கம் பார்க்க)

---

## தமிழகத்தில் முதல் தாலுகாதானம்

திருநெல்வேலி மாவட்டத்தைச்சேர்ந்த களக்காடு வட்டாரம் கிராமதானமாக அறிவிக்கப்பட்டது. களக்காடு கட்டபொம்மன் திடலில் ஜூன் 22-ம் திகதி நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அந்த வட்டாரவிதானத்திற்கான பத்திரங்கள் ஆச்சாரிய வினோபா அவர்களின் பிரதிநிதியான திரு. தாதா தர்மாதிகாரியிடம் அளிக்கப்பட்டது.

ஏற்கனவே தானமாகிவிட்ட இராதாபுரம், நாங்குநேரி, வள்ளியூர் ஆகிய மூன்று வட்டாரங்களுடன் களக்காடு வட்டாரமும், தானமானது நாங்குநேரி தாலுகா முழுவதையுமே கிராமதான திட்டத்திற்குள்ளாக்கியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 700 கிராமங்கள் இரண்டரை லட்சம் ஏக்கர் நிலம், 4 லட்சம் மக்கள் கொண்ட நாங்குநேரித் தாலுகாவே இந்தியாவில் முதன்முதலாகத் தானமான தாலுகாவாகும்.

கூட்டத்திற்குப் பஞ்சாயத்து யூனியன் தலைவர் திரு தவசிக்கனி தலைமை தாங்கினார். தவத்திரு குன்றக்குடி அடிகள் சர்வோதயத் தலைவர் ஆச்சாரிய தர்மாதிகாரி, சென்னை மாநில பூமிதான போர்டுச் செயலாளர் திரு. எஸ். ஆர். சுப்பிரமணியம் ஆகியோர் பேசினார்கள்.

நன்றி—கிராமராஜ்யம்.

---

## மன்னிப்பு கோருவது எப்படி?

யாரிடம் மன்னிப்புக் கோர விரும்புகிறீர்களோ அந்த மனிதரின் கண்களை நேராகப் பார்த்து பேசுங்கள். நீங்கள் செய்த பிழையைக் கூறிவருத்தத்தை தெரிவியுங்கள். அதுடன் இனிமேல் இப்படியான பிழை செய்வதில்லையென்றும்உறுதிப் படுத்துங்கள்,

நீங்கள் சொல்வது முழுவதும் உண்மை என்பதையும் உறுதி செய்யுங்கள். ஏனென்றால் ஏமாற்றும் வார்த்தைகளை கண்டுபிடிக்கும் சக்தி நம்மில் பலருக்கும் உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாக, வெறும் சமாதானங்கள் கூறி சமாளிக்கவோ அன்றி இன்னொருவர் மீது பழியை சுமத்தவோ முயற்சி செய்யாதீர்கள். நீங்கள் பிழைசெய்ததுஉண்மை தான் என்றால் அதை ஒப்புக்கொள்வதற்கு வெட்கப்படாதீர்கள். பிழையை ஒப்புக்கொள்வதும் திருத்திக்கொள்வதும் ஒரு மனிதனுக்கு வேண்டிய மிக முக்கிய நல்ல பழக்கங்ளில் ஒன்றாகும்.

—ஆங்கில அறிவு நூலிலிருந்து.

---

## நம்புவதே கஷ்டம்தான்!

"காந்திஜி வெளி அதிகாரத்தின் ஆதரவு எதுவும் இன்றி மக்களுக்குத் தலைவராக வந்தவர். சூதுவாதுகளும், தந்திரங்களும்இன்றித்தம்முடைய சொந்த ஒழுக்கத்தின் சக்தியையே துணையாகக் கொண்டு அரசியலில் வெற்றிகண்டவர். என்றும் எக்காலத்தும் பலாத்காரத்தைப் புறக்கணித்த வீரர். விவேகமும் தன்னடக்கமும் மிகுந்து, உறுதியும் அசைக்கமுடியாத மனவலிமையும் நிறைந்து, மக்களின் க்ஷேமத்துக்காகத் தம்முடைய சக்தி முழுவதையும் அர்ப்பணம்செய்தவர். ஐரோப்பாவின் மிருக பலத்தை எதிர்த்து வெற்றிபெற்று எக்காலத்தும் உன்னத ஸ்தானத்தை அடைந்தவர்.

இத்தகைய ஒருவர் மானிட வடிவத்திலே வந்தார் என்றும் இந்தப் பூவுலகத்தில் நடந்தார் என்றும் இனிமேல் வரப்போகும் மானிட சந்ததிகள் நம்புவதே கஷ்டம் தான்!"

— ஐன்ஸ்டீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரு கல்லூரிகளின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், திங்.

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்குமிடையே அண்மையில் நடைபெற்ற சினேகிதபூர்வமான விளையாட்டுப் போட்டியில் இரு கல்லூரிகளும் 13 முதலிடங்களைப் பெற்றன.

முடிவுகள் வருமாறு:

200 யார் ஓட்டம் மேற்பிரிவு: பி புவனேந்திரன், பி கதிராமநாதன், ஏ இராசரெத்தினம்.

கீழ்ம்பிரிவு: பி எம் எஸ் பற்றிக், ஆர் இராசசிங்கம், ஜி சிவபாலன்,

பரிதி வட்டம் எறிதல் கீழ்ப்பிரிவு: வி நல்லநாதன், எம் பி லுக்ஸராசா, கே டி அருளானந்தன்.

மேற்பிரிவு: பி குமரன், டி எப் மன்மதன், வி பாலசிங்கம்.

உயரம் பாய்தல் கீழ்ப் பிரிவு: கே தனபாலசிங்கம், எ ஒகஸ்ரின், கே ஆர் மனோகரன்.

நீளம் பாய்தல் மேற்பிரிவு: எப் ஜே ஜோசப், டி புரட்சிதாசன், பி. சிவகுருநாதன்

குண்டெறிதல் கீழ்ப் பிரிவு: வி நல்லநாதன், எஸ் ஜேந்திரன், கே. டி அருளானந்தன்.

உதைபந்தாட்டம்

## பலாலிஇராணுவ கோஷ்டியை ஞானோதயா வென்றது!

யாழ்ப்பாணம், செவ்.

கட்டுவன் ஞானோதயா விளையாட்டுக் கழகத்துக்கும், பலாலி இராணுவ கோஷ்டியினருக்குமிடையில் கட்டுவன் மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் ஞானோதயா கோஷ்டி 7—3 கோல்களால் வெற்றி பெற்றது

போட்டி தொடங்கிப் 15 நிமிடங்களில் ஞானோதயா கோஷ்டி தனது முதலாவது கோலைப் போட்டது. பின்பு தொடர்ந்து இரு கோல்களைப் போட்டுக் கோல் எண்ணிக்கையை மூன்றுக்கினர். டைவேளையின் பின் போட்டி மிக உற்சாகமாகக் காணப்பட்டது. ஞானோதயாக் கோஷ்டி தொடர்ந்து இன்னும் இரண்டு கோல்களைப் போட்டுக் கோல் எண்ணிக்கையை ஐந்துக்குக் கொண்டு வந்தனர். இத் தருணத்தில் இராணுவக் கோஷ்டியினர் மிக உற்சாகமாகவிளையாடினர் ஞானோதயாக் கோஷ்டியைச் சேர்ந்த ராசதுரை என்பவர் 'பௌல்' விளையாடியமையால் ஏற்படுத்திய 'பனல்டி'யைக் கொண்டு இராணுவத்தினர் ஒரு கோலைப் போட்டனர். இதைத் தொடர்ந்து இராணுவ கோஷ்டியினர் மிகத்திறமையாக விளையாடி இன்னும் இரண்டு கோல்களைப் போட்டுகோல் எண்ணிக்கையை மூன்றுக உயர்த்தினர். பின்பும் ஞானோதயா வீரர்கள் மிகவும் திறமையாக விளையாடி இன்னும் இரண்டு கோல்களைப் போட்டுக்கோல் எண்ணிக்கையை ஏழாகக் கொண்டு வந்தனர். போட்டி 7—3 ஆக முடிவடைந்தது.

இராணுவ முன்னணி வீரர்கள் எவ்வளவோ முயன்றும், திறமையாக விளையாடிய போதிலும் ஞானோதயா பின்னணி வீரர்களாகிய மணிராசா, மணிவண்ணன், ராசதுரை, ராசநாயகம் ஆகியோருக் கூடாகப் பந்தைக் கொண்டு செல்ல முடியாமற் திண்டாடினர்.

திரு. மகாதேவா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

ஈட்டி எறிதல் மேற்பிரிவு: கே டபிள்யூ விமலராசா, எம் வி ஜீவநாதன், பி குமரன்.

இப் போட்டிகள் யாவும் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

## கல்லூரிகள் விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணப் பாடசாலை விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டுப்போட்டி யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் தொடர்ந்து இரண்டு நாட்கள் நடைபெற்றது. இப் பேரட்டியில் யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, நடேஸ்வராக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி, ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகிய 7 கல்லூரிகள் பங்கு பற்றின.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு: என் திருஞானசம்பந்தமூர்த்தி, கே தர்மகுலசிங்கம், எஸ் லோகேந்திரன்.

மத்தியபிரிவு: ஜே ஸ்ரீ ஆனந்தராசா, வி பரமானந்தன் கே. வைத்தீஸ்வரன்.

கீழ்ப்பிரிவு: எஸ் ஆனந்தராசா, எஸ் சந்திரபாலன், எஸ் சுந்தரலிங்கம்.

200 யார் ஓட்டம் மேற்பிரிவு: கே கணபதி, எஸ் பாலதேவன், ஏ சேனாதிராசா.

குண்டெறிதல் மத்திய பிரிவு: என் பரமநாதன், ரீ யோகேஸ்வரன், ஆர் வரதராசா.

400 யார் ஓட்டம் மேற்பிரிவு: ஏ நகுலேந்திரன், என் கருணாமூர்த்தி, எம் ஸ்ரீகுமரன்

ஈட்டி எறிதல் மத்திய பிரிவு: ஜே ஸ்ரீ ஆனந்தராசா, பி பாக்கியராசா. ஆர் உத்தமநாதன்.

200 யார் ஓட்டம் மத்திய பிரிவு: ஏ நகுலேந்திரன், கே தளையசிங்கம், வி தர்மகுமார்.

ஈட்டி எறிதல் மேற்பிரிவு: இ இராசரெத்தினம், எஸ் ஆனந்தராசா, எஸ் சம்பந்தகுமார.

உயரம் பாய்தல் மத்திய பிரிவு: கே நற்குணராசா, கே தர்மபாலன், எஸ் தர்மராசா.

பரிதி வட்டம் வீசுதல் மத்திய பிரிவு: என் பரமநாதன், என் கருமூர்த்தி, எஸ் சண்முகநாதன்

நீளம் பாய்தல் மேற்பிரிவு: என் திருஞானசம்பந்தமூர்த்தி, ஆர் சுகுணசேயசன், ஏ சேனாதிராசா.


# பார்க்கர்




எல்லா பேனைகளுக்கும் உகந்த சிறந்த மை!

- புதிய பேனைகளை புத்துணர்ச்சி பெறச் செய்கின்றது.
- பழைய பேனைகளை புதிய ஜீவன் பெறச் செய்கின்றது.

உங்கள் பேனை புதியதோ, பழையதோ, என்ன ரகமோ, என்ன நிலையோ - ஆயினும் அதற்கு பார்க்கர் சுப்பர் குயிங்க் மை நிரப்புவது அத்தியாவசியமே! பேனைகள் எழுத தயங்கினால், தாமதித்தால் அது பேனைகளின் குற்றமல்ல; பாவிக்கும் மையின் குற்றம்! தரம் குறைந்த மைகள், குழாயில் அடைசலையும் தடங்கலையும் உண்டாக்கி எழுத்து முனையை "வாடச்" செய்கின்றன. இச் சந்தர்ப்பங்களில்தான் நீங்கள் சொல்வ் - X உடைய சுப்பர் குயிங்க் மையை நிரப்பவேண்டும். உங்கள் பேனையில் சுப்பர் குயிங்கினை நிரப்புங்கள்! இதிலுள்ள சொல்வ் - X அடைசலை அகற்றி..... எழுதும்போதே பேனையை சுத்திகரிக்கும்!

பள்ளிவேலைக்கும், வீட்டுவேலைக்கும் பாவியுங்கள்
கழுவக்கூடிய ரோயல் புளூ

நிரந்தரமான கந்தோர் ரெக்கார்டுகளுக்குப் பாவியுங்கள்!
பெர்மனன்ட் புளூ, பிளக், புளூ - பௌக், ரெட்,
கிரீன் மற்றும் டர்குயிஸ் புளூ.

பார்க்கர் பென் கம்பனிக்காகத் தயாரிப்பவர்கள்

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்





## கொழும்பு

செவ்வாய் 26 - 7 - 66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

6-45 நாதாஞ்சலி, 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 இசை மெட்டுக்கள்.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை, 7-15 ஐ. நா. உரைச்சித்திரம், 7-30 பஞ்சபாணம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நாதஸ்வரம், 10-00 நேயர் விருப்பம்.

—

## மீன் விற்பனை நிலையம்

வவனியா, திங்கள்

வவனியாவிலுள்ள மீன் தட்டுப்பாட்டை நீக்குவதன் பொருட்டு வவனியாவில் ஒரு மீன் விற்பனவு நிலையமொன்றை விரைவில் திறந்துவைக்க நடவடிக்கை மேற்கொள்வதாக அண்மையில் இங்கு விஜயம் செய்த மீன்பிடி கூட்டு ஸ்தாபன அதிகாரி கருத்து தெரிவித்துள்ளார் வவனியாபாராளுமன்ற உறுப்பினர் திரு. ரி. சிவசிதம்பரம் எடுத்துக்கொண்ட நடவடிக்கை விரைவில் பொதுமக்கள் கஷ்டம் நீக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## பாடசாலைகள் கதம்பவிழா

### போட்டிகள்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறைப் வட்டாரப் பாடசாலைகளின் கதம்ப விழா பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை மண்டபத்தில் திரு. ந. நடராசா தலைமையில் நடைபெற்றது. விழாவில் பரிசு பெற்ற பாடசாலைகள் வருமாறு:

சங்கீதம்: புலோலி கிழக்கு அரசினர் பாடசாலை, தொண்டமனாறு ஆங்கிலப் பாடசாலை, கலட்டி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை

அபினயப்பாட்டு: வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், பொலிகண்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலை, தட்டாதெரு மெதடிஸ்தமிஷன்பாடசாலை

கீழத்தேசநடனம்; தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலை, வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலயம், செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்கப்பாடசாலை.

கிராமிய நடனம்: வல்வெட்டித்துறை அமெரிக்கன் மிஷன் பாடசாலை, தாளையடி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, கலட்டி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை

நாடகம்: புலோலி ஆண் ஆங்கிலப்பாடசாலை, செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க பாடசாலை, கலட்டி றோமன் கத்தோலிக்கப்பாடசாலை.

வெற்றி பெற்றவர்களுக்கு திரு. ந. நடராசா பரிசில்கள் வழங்கினார்.

—

## திருத்தவேலைகள்

பருத்தித்துறை, திங்கள்

பருத்தித்துறை — நெல்லியடி பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட பானுத்தறை ஒழுங்கைக்கான திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. இதற்கான ஏற்பாட்டை நெல்லியடி பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு சி. சி. மாணிக்கவாசகர் செய்துள்ளார்

நெல்லியடி பட்டினசபை கலைக்கப்பட்டபின் முதன் முதலாக விசேஷ ஆணையாளரால் ஆரம்பிக்கப்படும் திருத்த வேலை இது என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக சாதனை

லாஸ்ஏஞ்ஜல்ஸ், ஜூலை 2

தடியூன்றிப் பாய்வதில் அமெரிக்க வீரரான ஜோன் பெனெல் சாதனை நிலைநாட்டியுள்ளார்.

இங்கு நடைபெற்ற ஐந்துநாளுக்கான விளையாட்டுப் போட்டிகளில் ஜோன்பெனெல்பதினேளடி ஆறேகால அங்குல தூரம் பாய்ந்துள்ளார். தடியூன்றிப் பாய்வதில் முன்னைன் உலக சாதனை: பதினேழு அடி ஐந்தரை அங்குலம். 5. (பி. டி. வி)

## சட்டம் சட்டைப்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

விழுங்கிவிடுவார் போலிருக்கிறது அவர் பார்வை!

அந்த அப்பாவி பெண்மணி, ஏமாற்றத்தோடு திருப்பி வெளிநடக்கிறார். கடையில் வெறிச்சோடிய நிலையில் கிடக்கும் அலமாரிகள் படபடக்கின்றன, பரிதாபமாக. — பேனு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணவன் கொலை; மனைவி காயம்; ஆசைநாயகன் தற்கொலை

## துணுக்காயில் சம்பவம்

துணுக்காய், செவ்வாய் ஒட்டறுத்தகுளம் குடியேற்றத் திட்டத்தில் வசிக்கும் பொ. சுப்பையா என்பவர் பல வெட்டுக்காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார். இவரது மனைவியான சு. கறுப்பாயி பலத்த காயங்களுடன் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். கறுப்பாயியின் ஆசை நாயகன் எனக் கூறப்படும் இராசையா கொத்தலாவலை கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

வவுனியா மாஜிஸ்திரேட் திரு. எஸ். பரமகுரு ஸ்தலத்தில் மரணவிசாரணை நடத்தினார். மரண விசாரணையில் சின்னர் மூத்தாம்பி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

காலஞ்சென்ற சுப்பையா, கறுப்பாயியின் கணவன். சென்ற நான்கு ஆண்டுகளாக, இக்கமத்தில் வேலை செய்துவந்தனர் இவர்களை எனக்கு நன்ருகத்தெரியும்.

நான் ஓர் கமத்தில்வேலையாளாக இருக்கின்றேன். காலஞ்சென்றவரிடம் ஓர் தண்ணீர் இறைக்கும் இயந்திரம் உண்டு. இவ்வியந்திரத்தை, கூலிக்குப் பிடித்து எனது கமத்திற்கு தண்ணீர் இறைப்பது வழக்கம். 21-ம் திகதி யந்திரம் தேவைப்பட்டதால் நான் 20-ம் திகதி வந்தேன். நான் கூப்பிட்டுக்கொண்டு வந்தேன். சுப்பையா அங்கே இல்லை. ஆனால் கறுப்பாயியும், சந்தேக நபரான இராசையா கொத்தலாவலையும் இருந்தார்கள். இராசையா கொத்தலாவலையை இரண்டு வருடமாக எனக்குத் தெரியும். அவருக்கும் கறுப்பாயிக்கும் தொடர்பு இருப்பதாக நான் கருதவில்லை. ஆனால் அவ்விதம் வேறு ஆட்கள் கூறினார்கள்.

21-ம் திகதி காலை யந்திரம் ஏற்றுவதற்கு வண்டிலும் கொண்டுவந்தேன். அப்பொழுது கறுப்பாயி காயங்களுடன் வெளியில் கிடந்தார். உடைகள் அலங்கோலமாக கிடந்தது. வீட்டிற்குள் இறந்தவர் இரத்தக்காயங்களுடன் கிடந்தார். நான் உடனே கிராம சேவையாளருக்கும், அயலவருக்கும் அறிவித்தேன். நான் சென்றபொழுது கிராம சேவையாளர் வீட்டில் இல்லை. அவருடைய மனைவிக்கு விஷயத்தைச் சொன்னேன்.

ஐயம்பிள்ளை சண்முகம் பிள்ளை, வீரசிங்கம், ஆகியோரும் சாட்சியமளித்தார்கள். வவுனியாவைத்திய நிலைய அதிபர் திரு எஸ். எச். தாமன் பிரேதபரிசோதனை நடத்தினர்.

விசாரணையின்போது சுப்பையா கொலைசெய்யப்பட்டதாகவும் சந்தேக நபரான இராசையா கொத்தலாவலை தற்கொலை செய்துகொண்டதாகவும், தெரிவிக்கப்பட்டது.

மன்னார் தலைமை நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் எஸ். பி. ரி. ஜெயதிலகா புலன் விசாரணை செய்தார்.

## இயற்கை மரணம்

கோண்டாவில், திங் தேநீர் கடையொன்றில் தேநீர் அருந்தி விட்டு கால் கழுவுவதற்குக் கிணற்றடிக்குச் சென்ற நபர் வழியில் மயங்கி வீழ்ந்து மரணமான சம்பவம் இணுவிலில் இடம் பெற்றது.

இது பற்றி மேலும்தெரிய வருவதாவது:

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த 65 வயதான நாகலிங்கம் தர்மலிங்கம் என்பவர் உறவினர் ஒருவரைக் காண்பதற்கு இணுவிலுக்கு வந்ததாகவும். இணுவில் ஆஸ்பத்திரிக்குச் சமீபத்திலுள்ள தேநீர் கடையென்றில் தேநீர் அருந்திவிட்டு கால் கழுவுவதற்கு சமீபத்திலுள்ள கிணற்றடிக்குச் செல்லுகையில் வழியில் மயங்கி விழுந்ததாகவும் சற்று நேரத்தில் மரணமானார் என்றும் அறியப்படுகிறது டாக்டர் இராமநாதன் பிரேத பரிசோதனை செய்தார். திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. சி. தர்மலிங்கம் காலஞ்சென்றவர் மிதமிஞ்சிக் குடிவகை பாவித்து வந்தமையால் அவரது இருதயம் பழுதடைந்ததே மரணத்திற்குக் காரணம் என்றும் இயற்கையால் ஏற்பட்ட மரணமென்றும் தீர்ப்பளித்தார்.

## மக்கள் தேவையை

(1ம்பக்கத் தொடர்ச்சி)

இல்லை.

### உள்ளே கோளாறு

பல்கலைக் கழகத்திற்குள்ளேயே தகராறுகள் இருக்கின்றன. அங்குள்ள ஊழியர்களுக்குள் கோஷ்டிமனப்பான்மை இருக்கிறது. பல்கலைக்கழகத்தின் நிலைமை குறித்து முந்திய அரசாங்கங்களை நான் குறைகூறவில்லை. இந்த மசோதா கட்சி அடிப்படையில் கொண்டு வரப்படவில்லை. தேசிய அடிப்படையில் கல்வியின் மேம்பாட்டைக் கருத்தில்கொண்டு இந்த மசோதா கொண்டுவரப்படுகிறது. இம்மசோதா மிகவும் ஆழ்ந்த பொறுப்புணர்ச்சியோடு தயாரிக்கப்பட்டுள்ளது.

### மந்திரியின் அதிகாரம்

இந்த மசோதா கல்விமந்திரிக்கு முழு அதிகாரம் வழங்கப்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. மந்திரி மந்திரிசபைக்குப் பதில் சொல்லவேண்டியவர் என்பதையும். மந்திரிசபை பார்லிமெண்டுக்குப் பதில் சொல்லவேண்டும் என்பதையும், பார்லிமெண்ட் மக்களுக்குப் பதில்சொல்லவேண்டும் என்பதையும் மறந்துவிடக்கூடாது.

மகார எம். திரு. சூரியாராய்ச்சி பேசியபோது பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கு அரசியலுரிமைகள் மசோதாவில் பறிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பொதுவாக மாணவர்கள் 18 வயதைக் கடந்த, முழுதும் வளர்ந்த பிரஜைகளாகவே இருக்கின்றனர். எனவேஅவர்களுக்கு அரசியலுரிமைகள் அளிக்கப்படவேண்டும்என்ருர். அசோகா கருணரத்னுவும் பேசினர்.

## கி. ச. தலைவர் தெரிவு

அச்சுவேலி, திங்கள்

அச்சுவேலி கிராமசபைத் தலைவராக திரு. எஸ். சபாரத்தினம் தெரிவுசெய்யப்பட்டார். உப தலைவராக திரு. எஸ். பொன்னம்பலம் தெரிவுசெய்யப்பட்டார். தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டவர் அரசாங்க சேவையில் முதலியார் பதவியிலிருந்து இளைப்பாறியவர்.

## சதி வழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விட்ட இரண்டாம் எதிரி இன்று நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் சரணடைவாரென எதிர்பார்க்கப்பட் போதிலும் அவர் வரவில்லை

இதன்பின்னர் சுனில் ஹேவாகேமீது ஆகஸ்ட் 16ந் தேதி ஆஜராகுமாறு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

### எதிரிகள் தாக்கப்பட்டனராம்

இவ்வழக்குச் சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் இன்று ஆஜர்செய்யப்பட்டுள்ள எதிரிகளில் எண்மர் பொலிஸ்பாதுகாவலிலிருந்த சமயம், பொலிசாராலும் கடற்படைச் சிப்பந்திகளாலும் கடுமையாகத் தாக்கப்பட்டனரென்றும், இத்தாக்குதலைத்தாங்க முடியாமல், அவர்கள் கூறியபடி எதிரிகள், நீதிபதியிடம் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தனரென்றும் அவர்கள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் நீதிபதியிடம் முறையிட்டார்.

நான்காம் எதிரி மேஜர் ஜெனரல் ஏ. ஆர். உடுகமவும் காப்டன் சிகேராவும் மண்ணிற கோட்டும் சூட்டும் அணிந்திருந்தனர். ஐவர் தாடிவளர்த்திருந்தனர் நீதிமன்றத்தில் உடுகமவின் மனைவியும் மற்றும் எதிரிகளின் உறவினர்களும் சமுகமளித்திருந்தனர்.

சதித்திட்டம் வகுத்தவர்கள் கொலை செய்யத்திட்டமிட்டிருந்தவர்களில் ஒருவரெனக் கருதப்படும் லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் எம். எம். பெரேராவும் பிரமுகர்களுக்கான இடத்தில் அமர்ந்திருந்தார்.

எதிரிகளின் சார்பில் திருவாளர்கள் ஸ்டான்லி திலகரத்ன, அனில்முனசிங்கா, பிரின்ஸ் குணசேகரா, மங்களாமுனசிங்கா, ஜோர்ஜ் ராஜபக்ஸ ஆகிய எதிர்க்கட்சி எம். பி.க்களும், செனட்டர் எஸ். டி. எஸ். சிறிவர்த்தனவும் ஆஜரானர்கள். அரசாங்கத் தரப்பில் அட்டர்ணி ஜெனரல் ஏ. ஸி. எம். அமீர், முடிக்குரிய வழக்கறிஞர்களான வி. எஸ். ஏ. புள்ளநாயகம், பன்டி டி சொய்ச, பேஸில்வைட் வேக்லி போல் ஆகியோரின் உதவியுடன் ஆஜரானர்.

மேஜர் ஜெனரல் ஏ. ஆர். உடுகம சார்பில் திஸ்ஸ விஜயரத்ன ஆஜரானர். வண. ஞானசீக தேரோ சார்பில் செனட்டர் சி. டி. எஸ். சிறிவர்த்தனவுடன் கே. சி. டி. சில்வா ஆஜரானர்.

அடுத்த மாதம் 16ந் தேதி விசாரணை மீண்டும் ஆரம்பமாகும்.

## பீலிக்ஸ் கிளப்பிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### பிரதமர் பதில்

பிரதம மந்திரி திரு. டட்லிசேனநாயகாபதிலளிக்கையில் மசோதா சபையில் சமர்ப்பிக்கப்பட்டதை ஏற்றுக்கொண்டு இரண்டாவது வாசிப்பை 25-ந் திகதிக்கு நியமித்ததுடன் அதனை அச்சடிப்பதற்கும் சபாநாயகர் ஏற்பாடு செய்துள்ளார். சபாநாயகர் ஏற்றுக்கொண்டபின் முதல் ஒழுங்குப் பிரச்னைக்கு இடமில்லை என்ருர்.

இரண்டாவது ஒழுங்குப் பிரச்னைக்கு அவர் பதிலளிக்கையில் மசோதாக்கள் உத்தியோகமொழியில்தான்இருக்கவேண்டுமென்பதுஅவசியமில்லையென்று ஏற்கனவே சபாநாயகர் ஒரு தீர்ப்பு அளித்துள்ளார். எனவே இந்தப் பிரச்னையும் எழவில்லை என்ருர்.

பிரதமரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு திரு. டட்லி சேனநாயகாவின் இரண்டு ஒழுங்குப் பிரச்னைகளையும் சபாநாயகர் நிராகரித்தார். இந்த ஒழுங்குப் பிரச்னைகளின் காரணமாக சபையின் மாமூல் நடவடிக்கைகள் ஒரு மணிநேரம் தடங்கலாயின.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் இலங்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# புதிய பஸ் நிலையம் நாளை திறக்கப்படும்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மத்திய பஸ் நிலையம் நாளை மாலை 3-30க்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு வேர்னன் அபயசேகராவினுல் திறந்துவைக்கப்படும்.

இந்தப்புதிய பஸ் நிலையத்தில் முதலில் தூரஇடங்களுக்குசசெல்லும் பஸ்கள் போக்குவரத்திலீடுபடுத்தப்படுமெனத் தெரிகிறது.

## வடபகுதி அசைஸ்விசாரணை

யாழ்ப்பாணம், செவ்.

அச்செழு கொலை வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யு தம்பையா கியூ சி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, நீதியரசர் இவ்வழக்கை அடுத்த பருவகால விசாரணைக்கு ஒத்தி வைத்தார். இவ்வழக்கில் எதிரிக்காக, புறக்டர் ஏ. அன்ரனி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஊர்காவற்றுறை கொலை வழக்கில் எதிரி பக்கத்து சார்பில் புங்குடுதீவைச் சேர்ந்த சபாபதி, பசுபதி, சரவணமுத்து ராஜேந்திரப் ஆகிய இரு சாட்சிகளைச் சேர்த்துக்கொள்ளும் படி, எதிரியின் வழக்கறிஞர் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நீதியரசர் ஏற்றுக் கொண்டார்.

அடுத்த பருவகால விசாரணை இம்மாதம் 28-ம் திகதி நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராசா முன்னிலையில் ஆரம்பமாகும். ஊர்காவற்றுறை கொலை வழக்கு முதலாவது வழக்காக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும். முதலாவது பருவகால விசாரணைகள் நேற்றுடன் முடிவடைந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து

## கதிர்காமத்திற்கு நேரடி பஸ்சேவை

இமையாணன், திங்கள்

கதிர்காம யாத்திரிகளின் வசதியைமுன்னிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு நேரடி பஸ் சேவையொன்று இன்று முதல் அமுலுக்குவந்துள்ளது.

தினமும் காலை ஆறு மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு நேரடியாகக் கதிர்காமத்தை இரவு 12 மணியளவில் சென்றடையும். இதற்குரிய கட்டணம் 12ரூபா 80 சதம் என அறிவிக்கப்பட்டுள்ளது, பிரயாணிகள் முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவுசெய்துகொள்ளவும் வசதிசெய்யப்பட்டிருக்கிறது.

## கொக்குவில்கிராமசபை உபதலைவர்

யாழ்ப்பாணம், திங்கள்

கொக்குவில் கிராமசபை உபதலைவர் தேர்தல் இன்று மாலை தலைவர் திரு சி. அருளம்பலம் தலைமையில் நடைபெற்றது.

16-ம் வட்டார அங்கத்தவர் திரு ப. ஸ்ரீஸ்கந்தராஜா உப தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதலைவர் பதவிக்கு இவருடன் போட்டியிட்ட திரு. ந. அருணசலத்துக்கு 5வாக்குகள் கிடைத்ததாகவும், திரு. ஸ்ரீஸ்கந்தராசாவுக்கு 9 வாக்குக்கள் கிடைத்ததாகவும் ஒருவர் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லையென்றும் தெரிகிறது.

திரு. ஸ்ரீஸ்கந்தராசாவின் பெயரை திரு. க. சற்குணநாதன் பிரேரித்தார். திரு. த. சோமசுந்தரம் அனுவதித்தார்.

## 5 பேர் கொண்ட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மசோதா மீதான விவாதங்களின்போது அரசாங்கக் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தெரிவிக்கும் சிறந்தகருத்துக்களை ஆராய்ந்து உடனடியாகத் திருத்தம் செய்வதற்கு இந்தக் கமிட்டி சிபார்சுசெய்யும். அரசாங்கக் கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சி, தமிழ் காங்கிரஸ் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி போன்ற எல்லா அரசியல் கட்சிகளுக்கும் இடம்கொடுக்கப்படும் என்று தெரிகின்றது.

இன்று முற்பகல் நடைபெற்ற அரசாங்கக்கட்சிப் பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் பிரதமமந்திரி பேசியபோது உயர் கல்வி மசோதாவைத் தனிப்பட்ட அரசியல்கட்சி அடிப்படையில் நோக்கவேண்டாம் என்றும், நாட்டின் பொதுத் தேவைக்கேற்ற விதத்தில் அது அமையும்வகையில் உருப்படியான யோசனைகளைத் தெரிவிக்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

உயர் கல்வி மசோதாமீது தமிழரசுக்கட்சியினர் உட்படப் பலர் தம் கருத்துக்களை வெளியிட்டனர்.

## திரு. தர்மரத்தினம் மீண்டும் தலைவர்

உடுப்பிட்டி, திங்கள்

உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். ஸி மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற உடுப்பிட்டி கிராம சபைத் தலைவர் தேர்வில் திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் 20 வாக்குகளை பெற்றுத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அவருடன் போட்டியிட்ட திரு. கே. இராசதுரை 4 வாக்குகளைப் பெற்ருர். திரு. எஸ். சோமசுந்தரம் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## அகில இலங்கை உடற்பயிற்சிப்போட்டி

இமையாணன், திங்கள்

அடுத்த மாதம் 4-ந்திகதி அனுராதபுரம் மத்தியமகாவித்தியாலயத்தில் அகில இலங்கை உடற்பயிற்சிப் போட்டி நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக யாழ்ப்பாணம் பகுதியிலிருந்து உடுப்பிட்டி மகளிர் மாணவிகள் சிலரும் செல்கின்றனர், யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்ற உடற்பயிற்சிப்போட்டியில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியே முதல் இடத்தைப்பெற்றுக்கொண்டது.

## அரவம் தீண்டி மரணம்

இமையாணன், ஞாயிறு

உடுப்பிட்டியிலுள்ள ஆதியாமூலை என்னும் இடத்தைச் சேர்ந்த பா. செல்லையா என்பவர் அரவம் தீண்டி மரணமானர்.